விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 சித்திரை 16 வியாழக்கிழமை (29.04.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 131

ரா ம் கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாந் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து

RAMCO

# இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு; மிக விரைவான மீள்குடியேற்றம்!



## இலங்கைக்கு இந்தியா அழுத்தம்

(திம்பு)

இனப்பிரச்சினைக்கு வேகமானதும் விரைவானதுமான அரசியல் தீர்வு, இடம் பெயர்ந்துள்ள மக்களை விரைவாக மீள்குடியமர்த்துதல் போன்ற வற்றுக்கு இலங்கை அரசுக்கு இந்திய அரசு அழுத்தம் கொடுத்துள்ளது. சார்க் உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்ற இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா, இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோருக்கிடையில் இடம்பெற்ற விசேட சந்திப்பின் போது இவ் அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. (16 ஆம் பக்கம் பார்க்க)



## ஆறு மாதத்தில் மீள்குடியேற்றம்

(கொழும்பு)

போரினால் இடம்பெயர்ந்துள்ள மக்கள் அனைவரும் இன்னும் ஆறு மாத காலத்தினுள் அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டு விடுவார்கள் என மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான அமைச்சராகப் பதவியேற்றுள்ள மில்ராய் பெர்னாண்டோ தெரிவித்திருக்கின்றார்.

வவுனியாவில் செய்தியாளர்களிடம் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நஷ்ட ஈடு ஒரு (02 ஆம் பக்கம் பார்க்க)

## ரணில்–மனோ கணேசன் இன்று இறுதிக்கட்டப் பேச்சு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசனுக்குமிடையில் பேச்சுவார்த்தை ஒன்று இன்று நடைபெறவிருப்பதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நேற்றும் இருதரப்பினருக்குமிடையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. எனினும் எந்தவிதத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஐக்கிய தேசிய முன்னணி சார்பாகத் தெரிவு செய்யப்பட்ட பிரபா கணேசன் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் அமருவார். அவர் சுயாதீனமாகச் செயற்படுவார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச–5)

## பொதுமக்களுக்குச் சேவை செய்வதே இராணுவத்தின் தற்போதைய நடவடிக்கை

### 51-வது படையணித் தளபதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் பொதுமக்களுக்கான சேவையை வழங்குவதற்காகவே இராணுவம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. தவிர படை நடவடிக்கைகளுக்காக இல்லை என யாழ்.51–வது படையணித் தளபதி பிரிகேடியர் சரத் விஜயசிங்க தெரிவித்தார்.

யாழ்.51–வது படையணித் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர்களுடனான சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது, யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக சில குழுக்கள் சிறுவர்களைக் கடத்த முயற்சிப்பது, கடத்திச் சென்று கப்பம் கோருவது, கப்பம் கேட்டுக் கொலை செய்வது– முயற்சிப்பது என்ற செய்திகள் பத்திரிகைகள் ஊடாக அறிய (16 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே...

கொழும்பு றோயல் கல்லூரியின் ஆசிரியர் குழாம் தயாரித்த க.பொ.த. உயர் தர மாணவர்களுக்கான

**பொருளியல்**

பாட மாதிரி வினாத்தாள்

## அனுமதியின்றி சுண்ணாம்புக்கல் அகழ்வு உரிய அமைப்பு ஊடாக நடவடிக்கை!

### வலம்புரி ஆசிரியர் தலையங்கத்திற்கு அரச அதிபர் விளக்கம்

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறை, மாவிட்டபுரம் பகுதிகளில் சுண்ணக்கல் அனுமதியின்றி அகழப்படுவது தொடர்பில் புவிச்சரிதவியல், அளவைகள், சுரங்கங்கள் பணியகத்தின் ஊடாக உரியவர்களுக்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

வலம்புரியில் நேற்று வெளியாகிய காங்கேசன்துறை, மாவிட்டபுரத்தில் கல் அகழ்வை தடுப்பது யார்? என்ற தலைப்பிலான ஆசிரியர் தலையங்கத்திற்கு விளக்கமளிக்கும் போதே யாழ்.அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவரின் விளக்கக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, காங்கேசன்துறை, மாவிட்டபுரத்தில் கல் அகழ்வைத் தடுப்பது யார்? என்ற தலைப்பில் நேற்று வலம்புரி ஆசிரியர் தலையங்கம் தீட்டியுள்ளதை எனது கவனத்தில் எடுத்துள்ளேன்.

இவ் விடயம் தொடர்பில் கடந்த மார்ச் 22 ஆம் திகதி புவிச்சரிதவியல், அளவைகள், சுரங்கங்கள் பணியகத்திற்கும் அகழ்வை மேற்கொள்ளும் நிறுவனங்களுக்கும் ஒரு கடிதத்தை எழுதியிருந்தேன்.

இலங்கையில் எப்பாகத்திலும் மண் அகழ்வை மேற்கொள்வதற்கு புவிச்சரிதவியல், அளவைகள், சுரங்கங்கள் பணியகத்தின் அனுமதி பெறப்பட வேண்டும். எனினும் காங்கேசன்துறை, மாவிட்டபுரம், கீரிமலைப் பகுதிகளில் எதுவித (02 ஆம் பக்கம் பார்க்க)

## உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கு பாகிஸ்தானும் இலங்கையும் தீர்மானம்

(கொழும்பு)

பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்குப் பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ராஸா கிலானி மற்றும் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் தீர்மானித்துள்ளனர்.

பாதுகாப்பு, வர்த்தகம் உள்ளிட்ட அனைத்து விடயங்களிலும் ஒத்துழைப்புடன் செயற்படுவது எனவும் இரு நாட்டுத் தலைவர்களும் தீர்மானித்துள்ளனர்.

பாகிஸ்தான் இலங்கைக்கு வழங்கி வரும் உதவிகளைத் தொடரும் எனவும் இராணுவப் பயிற்சிகள் தொடர்ந்து அளிக்கப்படும் எனவும் பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ராஸா கிலானி தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கை விமானப் படை விமானங்களுக்கான தளபாடங்களை வழங்க பாகிஸ்தான் (16 ஆம் பக்கம் பார்க்க)

## பார்வதி அம்மாவை திருப்பிய விவகாரம் பதிலளிக்க இந். மத்திய அரசுக்கு உத்தரவு

(சென்னை)


தமிழகத்தில் சிகிச்சை பெறச் சென்ற விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் தாயார் பார்வதியம்மாளை திருப்பியனுப்பியது குறித்து இந்திய மத்திய அரசு உடனடியாகப் பதிலளிக்க வேண்டும் எனச் சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பிரபாகரனின் தாயார் பார்வதியம்மாள் சிகிச்சைக்காக மலேசியாவிலிருந்து சென்னை சென்றிருந்தார். அவர் விமான நிலையத்தில் வைத்து மீண்டும் மலேசியாவுக்குத் திருப்பியனுப்பப்பட்டார்.

இதனை எதிர்த்துத் தமிழக சட்டத்தரணி கருப்பன் சென்னை உயர் நீதிமன்றத்தில் பொதுநலன் வழக்கு ஒன்றைத் தொடர்ந்தார். அதில் மருத்துவ சிகிச்சை பெறுவதற்காகக் கடந்த 16 ஆம் திகதி மலேசியாவிலிருந்து சென்னை சென்ற (16 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## பேசும் படம்



வேலைச்சுமை...!

# நடிகை குஷ்பு மீதான வழக்குகள் உச்ச நீதிமன்றத்தில் தள்ளுபடி

(சென்னை)

திருமணத்திற்கு முன்பு பெண்கள் உடலுறவு வைத்துக்கொள்வது தொடர்பில் பிரபல திரைப்பட நடிகை குஷ்பு தெரிவித்திருந்த கருத்துக்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த 22 வழக்குகளையும் இந்திய உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது.

திருமணத்துக்கு முன்னர் பெண்கள் பாலியல் உறவு வைத்துக்கொள்வது தவறில்லை என்று அவர் கூறியிருந்தார்.

படித்த இளைஞர்கள் தமக்கு மனைவியாக வருபவர்கள் கன்னித் தன்மையுடன் இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது நியாயமில்லை என்றும் குஷ்பு கருத்து வெளியிட்டிருந்தார்.

2005ஆம் ஆண்டு பத்திரிகை பேட்டி ஒன்றில் அவர் வெளியிட்டிருந்த இந்த கருத்துக்களுக்கு எதிராக அவர் மீது 22 வழக்குகள் தமிழ்நாட்டின் வெவ்வேறு நீதிமன்றங்களில் தொடுக்கப்பட்டிருந்தது.

இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் பல்வேறு நீதிமன்றங்களில் குஷ்பு மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இதை எதிர்த்து குஷ்பு தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை சென்னை உயர் நீதிமன்றம் நிராகரித்தது.

சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து



இந்திய உச்சநீதிமன்றத்தில் குஷ்பு மேல் முறையீடு செய்தார்.

அந்த வழக்கில் தீர்ப்பளித்த உச்சநீதிமன்றம் நீதிபதிகள் குஷ்புவின் மனுவை ஏற்று இது தொடர்பாக அவர் மீது தாக்கல் செய்யப்பட்ட 22 வழக்குகளையும் தள்ளுபடி செய்து நேற்று உத்தரவிட்டனர். (சு)

## மின்னல் தாக்கிய பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் கிழக்கில் மின்னல் தாக்குதலுக்குகிலக்காகி படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனாவைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்றுவந்த குடும்பப் பெண் சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன.

அதே இடத்தைச்சேர்ந்த சாந்தகுமார் வாசுகி (வயது-30) என்பவரே உயிரிழந்தவராவார்.

இப் பெண் கடந்த 23ஆம் திகதி சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-30)

## ஆட்டோ தடம்புரண்டதில் வயோதிபர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

நான்கு பேருடன் பயணித்துக்கொண்டிருந்த ஆட்டோ பள்ளம் ஒன்றில் குடை சாய்ந்ததில் அதில் பயணித்த ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்று மதியம் ஐந்து சந்திப்பகுதியில் இடம்பெற்ற இவ்விபத்துச்சம்பவத்தில் கொக்குவிலைச் சேர்ந்த மா.ராசகுமார் (வயது 65) என்பவரே கைமுறிந்து படுகாயம்டைந்த நிலையில் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கிரியைக்காக மயானத்துக்கு சென்று கொண்டி ருந்தபோது இச்சம் பவம் இடம் பெற் றுள்ளது. (ச-30)

## யாழ். கோட்டைப் பகுதிக்குள் சென்று அனைத்து மக்களும் பார்வையிட முடியும்

### இராணுவம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோட்டைக்குள் சென்று பார்வையிடுவதற்கு அனைத்துப் பொதுமக்களுக்கும் எதுவித தடையுமின்றி அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக யாழ். 51ஆவது படையணித் தளபதி பிரிகேடியர் சரத் விஜயசிங்க அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

யாழ்ப்பாணம் கோட்டையின் உள்பகுதியைச் சென்று பார்வையிடுவதற்கு அனைத்துப் பொது மக்களுக்கும் எதுவித தடையுமின்றி அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனினும் இது தொடர்பில் விரிவான அறிவித்தலை இராணுவத்தினர் விடுக்காமையினால் யாழ்ப்பாண மக்கள் மத்தியில் தப்பான அபிப்பிராயம் ஏற்பட்டுள்ளது.

அதாவது தென்னிலங்கையிலிருந்து வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு மாத்திரம்தான் யாழ்.கோட்டையின் உள் பகுதியை சென்று பார்வையிட முடியும் என்ற நிலைப்பாடு காணப்படுகிறது.

அவ்வாறு பாகுபாடு காட்டுவது இராணுவத்தின் பாதுகாப்புச் சேவையில்லை.

எனவே யாழ்ப்பாணப் பொதுமக்கள் எந்த வித தடையுமின்றி யாழ்ப்பாணக் கோட்டையின் உட்பகுதியை சென்று பார்வையிட முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## ஆறு மாதத்தில்...

சிலருக்கு மாத்திரமே கிடைத்திருக்கின்றது. பலருக்குக் கிடைக்கவில்லை. பல வீடுகள் முற்றாக அழிந்திருப்பதனால் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளவர்கள் தற் காலிக வீடுகளில் மூன்று, நான்கு குடும்பங்களாகச் சேர்ந்து வசிக்க வேண்டிய நிலையில் இருக்கின்றார்கள்.

இவர்களுக்கு மீள்குடியேற்ற அமைச்சின் கீழ் புதிய வீடுகளை அமைத்துத் தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அமைச்சரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கண்ணிவெடி அகற்றும் வேகத்திற்கு ஏற்ப மீள்குடியேற்ற நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்படும் என அமைச்சர் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்தவர்களின் பிரதேசங்களில் உள்ள கண்ணிவெடிகள் முழுமையாக அகற்றப்பட்டிருக்குமானால் நாளையே இடம் பெயர்ந்தவர்கள் அனைவரையும் மீள்குடியேற்றம் செய்துவிட முடியும் என்றார். (ச-9)

## பலாங்கொடை வாகன விபத்தில் 4 பேர் பலி; 20 பேர் படுகாயம்

(கொழும்பு)

பலாங்கொடை இம்புல்வே பகுதியில் நேற்று பிற்பகல் 2 மணியளவில் இடம் பெற்ற வாகன விபத்தொன்றில் 4 பேர் உயிரிழந்துள்ள தோடு 20 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

பதுளையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான உடஹாமுல்ல டிப்போவின் பஸ் வண்டி ஒன்றும் பதுளை நோக்கிச் சென்ற லொறி ஒன்றும் நேருக்கு நேராக மோதிய போதே இந்த விபத்துச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

படுகாயமடைந்தவர்களில் 10 பேர் பலாங்கொடை வைத்தியசாலையிலும் மேலும் 10 பேர் இரத்தினபுரி வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த விபத்துச் சம்பவம் தொடர்பான விசாரணைகளில் பலாங்கொடை பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை ஹிஜிராபுர கிராமத்தில் நேற்று பிற்பகல் வேளையில் இடம் பெற்ற தீ சம்பவமொன்றில் 50 வயதான ஆண் ஒருவர் பரிதாப கரமாக உயிரிழந்துள்ளார். (ச-9)

## அனுமதியின்றி சுண்ணாம்புக்...

அனுமதியுமின்றி கல் அகழ்வு இடம் பெறுகின் றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அனுமதியின்றி மேற்கொள்ளப்படும் கல் அகழ்வு தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டிருந்தேன்.

இக் கடிதம் தொடர்பில் புவிச்சரிதவியல், அளவைகள், சுரங்கங்கள் பணியகத்தின் பணிப்பாளர் என்.பி.விஜயநந்தாவினால் கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதி பதில் கடிதம் அனுப்பப்பட்டது.

இக் கடிதம் கல் அகழ்வில் ஈடுபட்ட நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதன் பிரதியாகும். அதில் புரிச்சரிதவியல், அளவைகள், சுரங்கங்கள் பணியகத்தின் அனுமதியுடன் மாத்திரமே கல் அகழ்வு மேற்கொள்ள முடியும்.

அவ்வாறு அனுமதியின்றி மேற்கொள்ளப்படும் கல் அகழ்வு நடவடிக்கை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு யாழ். அரச அதிபர் க.கணேஷ் வலம்புரியின்ஆசிரியர்தலையங்கத் திற்கு அறிவித்தலில்தெரிவித்துள்ளார். (ந-5)

## கொழும்பு பல்கலைக்கழக டிப்ளோமா

கொழும்பு பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

பகுதி நேரமாக பயிலக்கூடிய இக்கற்கைநெறிக்கான காலம் ஓர் ஆண்டு ஆகும். பட்டதாரி மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள், தனியார் துறை ஊழியர்கள் அனைவரும் விண்ணப்பிக்க முடியும். பூர்த்தி செய்வோர் பல்கலைக் கழகத்தின் தகவல்தொழில் நுட்பமாணி பட்டக்கற்கை நெறியையும் தொடர முடியும்.

A/L, O/L பரீட்சைக்கு தோற்றத் தவறியோரும் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் அடிப்படைக்கணனிக் கற்கை நெறியை பூர்த்தி செய்வதன் மூலம் மேற்படி கற்கை நெறியை தொடர முடியும். மேலதிக விபரங்களையும் ரூபா 100,000 பெறுமதியான புலமைப்பரிசில் சம்பந்தமான தகவல்களையும் இல. 324 ப்லாலி வீதி, பல்கலைக்கழக சந்தியில் அமைந்துள்ள எம்.சி.எஸ் தகவல் தொழில்நுட்ப வளாகத்தில் பெற்றுக் கொள்ளலாம். (ச-165)


## கைத்தொழில் சேவைகள்

புதிய தொழில்களுக்கு திட்ட அறிக்கை ( Project Report) தயாரித்தல், இயந்திரங்கள் உபகரணங்கள் பெற்றுத்தரல், தொழிற் பயிற்சி பற்றிய ஆலோசனைகள், சுயதொழில் ஆரம்பிப்பவர்களுக்கு பயிற்சியும் வழிகாட்டலும்

### தொண்டர்கள் தேவை

கைத்தொழில் நடவடிக்கைகளுக்கும் தகவல்கள் சேகரிப்பதற்கும் தன்னார்வத் தொண்டர்கள் ( Volunteers ) தேவை. ஆர்வமும் அர்ப்பணிப்பும் முக்கியம்.

ம.ஜனநாயகம்
பொறியியல் ஆலோசகர்
+61296367846 0714702122
jananayakam@yahoo.com
(1276)

## தவறிவிட்டது

உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய் எனும் முகவரியைச் சேர்ந்த மரியதாசன் அமலராசா என்பவரது தேசிய அடையாள அட்டை 05.04.2010 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.
T.P.: 0214591744
0771676388
(128)

## ஸ்ரீராம ஜெயம்

இந்தியாவின் எட்டயபுரத்தைச் சேர்ந்த புகழ் பெற்ற ஜோதிடர் S.சந்திரபோஸ் ஜாதகம், கை ரேகை, எண் கணிதம், திருமணப் பொருத்தம் மிகத்துல்லியமாகப் பார்க்கப்படும். T.P.:0778752163
414, சன்ஜெயா உணவகம், மேல்மாடி அறை இல.02 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(1249)

## காணி விற்பனைக்கு

இல.43 அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கு, சுண்ணாகம் 8 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு கொள்ள பின்வரும் தொலைபேசி இலக்கத்தில் கதைக்கலாம்.
Dr.R.கனகலிங்கம் 0779522105
Mr.சி.தனஞ்சயன் 0714102174
Mrs.ச.ஜெயபாலன் 0771622770
(1212)

# இன்று ஒரு தகவல்

## புகழ்மயக்கம்

இந்த உலகத்தில் புகழுக்கு மயாங்காதவர்கள் யாராவது உண்டா?

ஒருத்தரைப் பார்த்து இன்னொருத்தர் சொன்னார்:

“சேர்! இந்த அகில உலகத்திலேயும் புகழுக்கு மயாங்காதவர் நீங்கள் ஒருத்தர் தான்” என்றார். இதைக் கேட்டதும் அவர்,

“ அப்படியா? ரொம்ப ரொம்ப நன்றி சேர்” என்று சொல்லி அசடு வழிந்தார்.

அப்படியானால் என்ன அர்த்தம்?

அதற்கே அவர் மயங்கி விட்டார் என்று அர்த்தம்!

இரண்டு பேர் பேசிக் கொண்டிருந்தார்கள். அந்த இரண்டு பேரில் ஒருவர் பணக்காரர். இன்னொருவர் அறிவாளி. இது இரண்டும் ஒரே இடத்தில் இருப்பது தான் அபூர்வமாச்சே!

பணக்காரருக்கு யாராவது நம்மைப் புகழமாட்டார்களா? என்று ஆசை.

பக்கத்திலிருக்கும் அறிவாளியோ மிகவும் ஏழை.

அதனால் அந்தப் பணக்காரர் காசு கொடுத்தாவது புகழ் மொழியைக் கேட்க விரும்பினார்.

அந்த ஏழையைப் பார்த்து,

“இதோ பார். என்னிடம் ஆயிரம் பொற்காசுகள் இருக்கிறது. அதில் நூறு பொற்காசுகளை உனக்குத் தருகிறேன். நீ என்னைப் புகழ்ந்து பேச வேண்டும். செய்வாயா?” என்று கேட்டார்.

“இது நேர்மையான பங்கீடு இல்லை. நீங்கள் பங்கிடுவது நேர் மையாக இல்லாததால் நான் உங்களைப் புகழ்ந்து பேசமாட் டேன்” என்று சொல்லி விட்டார் அவர்.

“அப்படியானால் என்னிடமுள்ள பணத்தை அரைவாசியாக பிரித்துக் கொள்வோம். எனக்கு 500. உனக்கு 500. இப்பொழுதாவது என்னைப் புகழ்ந்து பேசுவாயா?” என்று கேட்டார்.

இவர் பார்த்தார்.

“ என்னிடம் 500 உன்னிடம் 500 இருந்தால் நாமிருவரும் சமம் என்று தானே அர்த்தம். அப்படியிருக்கும் போது எனக்குச் சமமாக பணம் வைத்திருக்கும் உங்களை நான் எப்படிப் புகழ்ந்து பேச முடியும்” என்றார்.

“ சரி, நான் வைத்திருக்கும் அவ்வளவையும் உன்னிடம் கொடுத்து விட்டால் அப்பொழுதாவது என்னைப் புகழ்ந்து பேசுவாயா” என்று கேட்டார் அவர்.

நீங்கள் உங்களிடமுள்ள எல்லாவற்றையும் கொடுத்து விட்டால் நான் செல்வந்தன் ஆகிவிடுவேன். நீங்கள் ஏழையாகி விடுவீர்கள். செல்வந்தனான நான் ஒன்றுமேயில்லாத ஏழையாகிய உங்களை எப்படிப் புகழ்ந்து பேசுவது” என்றார் இவர்.

அதுவும் நியாயம் தானே!

ஒன்றுமில்லாதவனைப் புகழ்ந்து என்ன ஆகப் போகுது?

இப்பொழுது தான் அந்தப் பெரிய மனிதன் யோசித்தார்.

நாம் என்ன செய்தாலும் இந்த ஏழையின் வாயிலிருந்து புகழ்மொழிகளை வாங்க முடியாது என்று புரிந்து கொண்டார்.

புகழ்மொழிகளை விலைக்கு வாங்கி விட முடியாது?

அப்படி வாங்க வேண்டும் என்று நினைத்தால் அதனால் எந்தப் பிரயோசனமும் இல்லை. புகழ் தானாக வந்து சேர வேண்டுமானால் அதற்குத் தகுந்தாற் போல் நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும். அதுதான் முறை.

அதை விட்டு விட்டு , காசு கொடுத்து புகழ வைப்பதோ, கடதாசியில் அச்சடித்து சுவரில் ஒட்டுவதோ எத்தனை நாளைக்குத் தான் நிலைக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

ஒருத்தன் அப்படித்தான் சுவரில் பெரிய போஸ்டரை ஒட்டிக் கொண்டிருந்தான். கிட்டப் போய் அதில் என்ன எழுதியிருக்கிறது என்று பார்த்தேன். “பிறந்தநாள் காணும் பெரியவரே! நீங்கள் வாழ்க பல்லாண்டு!” என்று எழுதியிருந்தது.

நான் அந்த ஆளைப் பார்த்து ...

“ஏங்க ... நீங்க பிறந்தநாள் வாழ்த்து தெரிவிக்க வேண்டுமானால் நேராக அந்தப் பெரியவரைப் பார்த்துச் சொல்லக் கூடாதா? இப்படி இந்தச் சுவரில் உங்கள் வாழ்த்தை பசை தடவி ஒட்டுகிறீர்களே... நீங்கள் இப்படி ஒட்டுவது அந்தப் பெரியவருக்குத்தெரியுமா? ” என்று கேட்டேன். “தெரியும்” என்றார்.

“எப்படி” என்றேன்.

“அந்தப் பெரியவரே நான் தானே!” என்றான் அந்த ஆள்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

மீள் எழுச்சித் திட்டத்தின் மூலம்

# உயர் பாதுகாப்பு வலயத்தில் மீள்குடியேறிய மக்களுக்கு பல்வேறு வேலைத் திட்டங்கள்

(கொழும்பு)

வடக்கின் துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உயர் பாதுகாப்பு வலயங்களில் மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கான வேலைத்திட்டங்களினை யாழ்.மாவட்ட மீள் எழுச்சித் திட்டம் மேற்கொண்டு வருவதாக பிரதித் திட்டப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் முதல் இத்திட்டங்கள் தெல்லிப்பழை, உடுவில், கோப்பாய் ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இவற்றில் தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவிலுள்ள இளவாலை வடக்கு, வித்தகபுரம், பண்ணை, தெல்லிப்பழை கிழக்கு, கட்டுவன், தெல்லிப்பழை, வசாவிளான் கிழக்கு போன்ற உயர் பாதுகாப்பு வலயங்களிலிருந்து விடுவிக்கப்பட்ட கிராமங்களில் மீளக் குடியமர்ந்த 507 குடும்பங்களுக்கும் கோப்பாய் பிரிவில் வடவாய் கிராமத்தில் மீள்குடியேறிய 260 குடும்பங்களும் உடுவில் பிரதேசத்தில் உள்ள புன்னாலைக் கட்டுவன், குப்பிளான் வடக்கு ஆகிய கிராமங்களில் மீள்குடியேறிய 70 குடும்பங்களுக்கும் இவ் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வேலைகள் நடைபெற்று வருகின்றது.

இக்கிராமங்களில் மீள்குடியேறிய மக்கள் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் இக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (6-30)

# வவுனியா வடக்கில் 1086 பேர் மீள்குடியேற்றம்

(கொழும்பு)

மெனிக்பாம் நிவாரணக் கிராமங்களில் இருந்த ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்.

இதில் வவுனியாவில் வடபகுதியில் ஆயிரத்து 86 பேர் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளத்தாக வடமாகாண இடம்பெயர்ந்தவர்களுக்கான அலுவலகம் தெரிவித்துள்ளது.

நெடுங்கேணி, குளவிசுட்டான், கற்குளம், மாறிலுப்பை உள்ளிட்ட பகுதிகளில் இவர்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளதாக அலுவலகத்தின் சிரேஸ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதுவரையில் சுமார் 2 இலட்சம் பேர் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட அவர் சில பிரதேசங் களில் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

கிளிநொச்சி மற்றும் முல்லைத் தீவு பகுதிகளில் கண்ணிவெடி அகற்றப்பட்ட இடங்களில் மீள்குடியேற்றப்படும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் மெனிக்பாம் நிவாரணக் கிராமங்களிலுள்ள 74 ஆயிரம் பேரை மீள்குடியமர்த்த வேண்டியுள்ளதாகவும் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (6-4)

## சுவாமி விவேகானந்தர் சொன்ன கதைகள்

யா/ மேலைப்புலோலி சைவப் பிரகாச வித்தியாலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா சுவாமி “விவேகானந்தர் சொன்ன கதைகள்” பற்றி உரை நிகழ்த்தவுள்ளார்.

அதிபர் எம்.கனகலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் தரம்5 மாணவர்கள் பங்குபற்றவுள்ளனர். (4)

# மின் கட்டணங்களைச் செலுத்த மக்கள் வங்கிக் கிளைகளில் புதிய கருமபீடங்கள் இன்று திறந்து வைப்பு

(யாழ்ப்பாணம்)

மின்சாரக் கட்டணங்களைச் செலுத்தும் நடைமுறையை விரிவுபடுத்தும் நோக்கமாக சுன்னாகம், சாவகச்சேரி, நெல்லியடி ஆகிய மக்கள் வங்கிக் கிளைகளில் புதிய கரும பீடங்கள் சம்பிரதாய பூர்வமாக இன்று வியாழக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

இக் கருமபீடங்கள் இலங்கை மின்சார சபையின் உயர் அதிகாரிகளாலும் மக்கள் வங்கியின் உயர் அதிகாரிகளாலும் திறந்து வைக்கப்படவுள்ளதுடன் மின் பாவனையாளர்கள் இக்கரும பீடங்களில் பணத்தைச் செலுத்துவதன் மூலம் அவர்களது கணக்கில் வரவு வைப்பதற்கு ஏற்படும் தாமதங்களை தவிர்த்துக் கொள்ளலாம் என இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் ஏற்கனவே இந்த நடைமுறை இலங்கை மின்சார சபை வடமாகாண பிரதிப் பொது முகாமையாளர் காரியாலயத்திலும் ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கிக் கிளையிலும் மற்றும் யாழ் பிரதான தபாலகத்திலும் அமுல்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-4)

## இராசி பலன்

*29-04-2010*

*(சித்திரை 8 , வியாழக்கிழமை)*

*பிரதமை பிற்பகல் 5.37மணிவரை*

*விசாகம் பின்னிரவு 4.49 மணிவரை*

*இராகுகாலம் 1.28-2.58 மணிவரை*

*சுபநேரம் 7.28-8.58 மணிவரை*

*புங்குடுதீவு பாணாவிடைச் சிவன் கொடி,*




*தெல்லிப்பழை காசி விநாயகர் கொடி.*

| | |
|---|---|
| மேடம் | குடும்ப மகிழ்ச்சி, சென்ற இடத்தில் செல்வாக்கு, விருந்துபசாரம், ஆரோக்கியம். |
| இடபம் | பகைவர் நேசம், செய்தொழில் விருத்தி, காரியநன்மை, சுப நிகழ்வு |
| மிதுனம் | பணக்குறைவு, அஜீரணக் கோளாறு, காரிய இடையூறு, குடும்பக் கவலை. |
| கடகம் | தன்னம்பிக்கைக் குறைவு, சுபசெலவு, புதிய திருப்பம், முயற்சி தாமதம். |
| சிங்கம் | மனோ தைரியம், ஜனவசியம், எடுத்த காரியம் கைகூடும், உறவினர் வருகை. |
| கன்னி | போசன சுகக்குறைவு, மனோ சங்கடம், காரிய தாமதம், ரோக நிலை. |
| துலாம் | வெகுமானம், நல்ல முயற்சி, போசன சுகம், தெய்வசிந்தை. |
| விருச்சிகம் | சோம்பல் நிலை, தொழில் ஆர்வம், சயனசுகக் குறைவு, தனவிரயம். |
| தனுசு | தனதானிய சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு, குடும்பசுகம், தொழில் நன்மை. |
| மகரம் | பெரியோரால் மதிக்கப்படுதல், அதிகாரம், போசன சுகம், சுபசெய்தி. |
| கும்பம் | உத்தியோக நன்மை, எதிர்பாராத செலவு, பிரயாண நன்மை, சகோதரர் உதவி. |
| மீனம் | அஜீரணக் கோளாறு, எதிர்பாராத பகை, பொருள் விரயம், முயற்சி தாமதம். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கல்வியங்காடு | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 70 |
| பச்சைமிளகாய் | 60 | 70 | 70 |
| தக்காளி | 40 | 50 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 50 |
| கோவா | 40 | 50 | 50 |
| கரட் | 100 | 120 | 90 |
| பூசணி | 30 | 40 | 40 |
| புடோல் | 40 | 50 | 40 |
| வாழைக்காய் | 40 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 60 | 70 | 60 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 50 |
| பாகற்காய் | 100 | 120 | 50 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 40 |
| கரணைக் கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 120 | 140 | 80 |
| லீக்ஸ் | 80 | 90 | 90 |
| பீற்றூட் | 40 | 50 | 40 |
| கறிமிளகாய் | 80 | 100 | 80 |
| முருங்கைக்காய் | 200 | 220 | 200 |
| போஞ்சி | 200 | 220 | 130 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 | 40 |
| கீரை - 1 பிடி | 30 | 35 | 30 |
| தேசிக்காய் | 80 | 90 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 35 |

யாழ் நூலகம் சம்பந்தமான குறைகளைக் கேட்டு நூலகத்தை கணனி மயப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் யாழ். நூலகக்கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோர் குறைகளைக் கேட்டறிவதையும் ஆளுநர் உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்துகொண்ட யாழ் நூலக உத்தியோத்தர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# வாக்கு மோசடி தொடர்பாக ஒழுக்காற்றுக்குழு விசாரணை

(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தலில் நாவலப்பிட்டி பிரதேசத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் வாக்கு மோசடி தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஒழுங்காற்றுக்குழு நேற்று தனது விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

சம்பவம் தொடர்பாக விசாரணை செய்வதற்கு ஒழுங்காற்றுக்குழு நாவலப்பிட்டி பிரதேசத்திற்கு சென்றுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிர்வாகச் செயலாளர் எஸ்.ஏச்.ஆரியசேன தெரிவித்தார்.

அங்கு ஒழுங்காற்றுக்குழுவின் உறுப்பினர்கள் சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் தரப்பினரிடம் இருந்து வாக்கு மூலங்களைப் பெற்றுக்கொள்ளவுள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளை நடத்துவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அண்மையில் ஒழுக்காற்றுக் குழுவொன்றை நியமித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-4)

# கிராம அலுவலர் எல்லைகளை மீள் வரைபு செய்யத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள கிராம அலுவலர் பிரிவுகளின் எல்லைகள் மீள்வரைவு செய்யப்படவுள்ளன.

இம் மீள்வரைவுக்கான அனைத்து நடவடிக்கைகளையும் யாழ்.செயலகம் மேற்கொண்டுள்ளது.

இதற்கான பணிப்புரைகள் யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்துப் பிரதேச செயலகங்களுக்கும் யாழ்.செயலகத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக மேற்படி கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எல்லைகள் பல்வேறு இடங்களில் குழப்பம் நிறைந்தவையாகவும் தெளிவற்றவையாகவும் பொது மக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தக் கூடியதாகவும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (6-4)

# வடக்கு கிழக்கில் மீன் உற்பத்தி ஊக்குவிக்கப்படும்-அமைச்சர் மில்றோய்

போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் மீள் குடியேற்ற வேலைத்திட்டத்தில் நிலவி வருகின்ற குறைபாடுகளைக் கண்டறிந்து அதனை உரிய வகையில் நிவர்த்திப்பதுடன் அவர்களின் வாழ்வாதார அபிவிருத்தியில் முக்கிய கவனம் செலுத்தி அந்த மக்களின் நிலையான வாழ்க்கைக்கு வித்திடுவதே எமது பிரதான இலக்காகும் என்று மீள்குடியேற்ற அமைச்சர் மில்றோய் பெர்னாண்டோ தெரிவித்தார்.

புதிய அமைச்சரவையில் மீள்குடி யேற்ற அமைச்சராக தெரிவுசெய்யப்பட்டுள்ள மில்றோய் பெர்னாண்டோ கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள அமைச்சில் நேற்று முன் தினம் காலை 10.15 மணியளவில் தமது பொறுப்பினை ஏற்றுக்கொண்டார்.

நிகழ்வின் பின்னர் நடைபெற்ற முதலாவது செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

எமது நாட்டைப் பொறுத்தவரையில் மீள் குடியேற்ற அமைச்சு என்பது மிகவும் முக்கியமான அமைச்சாகும். இதன் பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டுள்ளமை தொடர்பில் மகிழ்ச்சியடைகிறேன்.

கடந்த காலங்களில் இடம்பெற்று வந்த யுத்தத்தின் இறுதி நேரத்தில் பெருந் தொகையான மக்கள் பாரிய இன்னல்களுக்கு முகம் கொடுத்த அதேவேளை இலட்சக்கணக்கான மக்கள் தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறி அகதிகளாக வாழவேண்டிய சூழல் ஏற்பட்டது.

வடக்கு கிழக்கைப் பொறுத்த வரையில் அந்தப் பகுதிகள் வளங்கள் நிறைந்தவையாகும். அப்பகுதிகளை அபிவிருத்தியடையச் செய்ய வேண்டுமெனில் அங்குள்ள வளங்களை உரிய முறையில் பேணுவது அவசியம். விஷேடமாக அங்கு மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் அதன்மூலம் தொழில் வாய்ப்பினை அதிகரித்து பிரச்சினைகளுக்கு தீர்வினை எட்டுவதற்கும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றார். (6-4)

# அவுஸ்.கடற்பரப்பில் 41 பேருடன் பயணித்த படகு கைப்பற்றப்பட்டது

(கொழும்பு)

அவுஸ்திரேலிய அருகே உள்ள கடற்பரப்பில் பயணித்துக் கொண்டிருந்த படகொன்றை அந்த நாட்டு கடற்படையினர் கைப் பற்றியுள்ளனர்.

41 பேரைக் கொண்ட குறித்த படகில் இருந்தவர்கள் தொடர்பான விசாரணைகள் தற்சமயம் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்கு அவுஸ்திரேலியா கடற்கரை அருகிலுள்ள ஆஸ்மோ தீவு அருகில் 41 பேருடன் இந்தப் படகு பயணித்துக் கொண்டிருந்தது. இதனை அவதானித்த அவுஸ்திரேலிய கடற்படையினர் படகை இடைமறித்து விசாரணைக்காக அருகிலுள்ள கிறிஸ்மஸ் தீவுக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

இதுதொடர்பாக அவுஸ்திரேலியா உள்துறை அமைச்சர் கருத்துத் தெரிவிக்கையில்,

குறித்த படகில் உள்ளவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று தெரியவில்லை. எனினும் அவர்கள் இலங்கையர்களாவோ ஆப்கானிஸ்தானியர்களாகவோ இருக்கலாம் என்று தெரிவித்தார்.

எவ்வாறாயினும் புகலிடம் கோரும் அவர்களின் கோரிக்கைகளை இன்னும் 6 மாத காலத்திற்கு பரிசீலிக்க முடியாது என்று அவர் குறிப்பிட்டார். அவுஸ்திரேலிய அரசாங்கம் இந்த மாதம் 9 ஆம் திகதி முதல் இலங்கை நாட்டைச் சேர்ந் தவர்களுக்கு 3மாதங்களும் ஆப்கானிஸ்தானியர்களுக்கு 6 மாதங்களும் புகலிடக் கோரிக்கையை தடைசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-4)

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை துரித அபிவிருத்தி செய்ய நடவழிக்கை

## அமைச்சர் ஜனக பண்டார

(கொழும்பு)

இலங்கையை ஆசியாவின் தலைசிறந்த நாடாகக் கட்டியெழுப்புவதுடன் மஹிந்த சிந்தனையின் இலக்கை அடைவதற்கான சகல செயற்பாடுகளுக்கும் முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்குவேன். அத்தோடு எனக்கு வழங்கப்பட்டுள்ள புதிய அமைப்புச்சுப் பொறுப்புக்களினூடாக பொதுமக்களுக்கு சிறப்பான சேவையினையும் பெற்றுக்கொடுப்பேன் என காணி மாற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பத்தரமுல்லையிலுள்ள காணி அமைச்சில் தனது அமைச்சுப் பொறுப்புக்களை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டதன் பின்னரே இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், நாட்டின் சகல பகுதிகளிலும் மஹிந்த சிந்தனையினூடாக பாரிய வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதை யாவரும் நன்கு அறிவீர்கள். அதனை மேலும் துரிதப்படுத்தி குறுகிய காலப் பகுதிக்குள் நாட்டை அபிவிருத்தி செய்வதே எமது நோக்கமாகும்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு பகுதிகளையும் துரித அபிவிருத்தி செய்து அப்பகுதி மக்களுடைய வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான சகல வேலைத் திட்டங்களையும் துரிதமாக முன்னெடுத்து வருகின்றோம்.

வடக்கின் வசந்தம், கிழக்கின் உதயம் போன்ற வேலைத்திட்டங்களினூடாக அப்பகுதிகளில் பாரிய அபிவிருத்தி வேலைகள் இடம்பெறுகின்றன. பாதைகள், பாலங்கள், குளங்கள் மற்றும் பாடசாலைகள், மதஸ்தலங்கள் என சகல வசதிகளையும் அப்பகுதி மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கான எமது இலக்கு குறுகிய காலத்திற்குள் நிறைவேற்றப்படும் .

அத்தோடு, நாட்டில் தற்போது நடைமுறையிலிருக்கின்ற அரசியல் சீர்திருத்தத்தில் திருத்தங்களை ஏற்படுத்தி நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் குந்தகம் விளைவிக்காத அரசியல் யாப்பு ஒன்ளறை ஏற்படுத்துவதும் எமது மற்றுமொரு எதிர்பார்ப்பாகும்.

அந்த எதிர்பார்ப்பினையும் நிறைவேற்றிக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகவேயுள்ளன. கடந்த பாராளுமன்றத் தேர்தலின்போது மூன்றில் இரண்டு பெரும்பான்மைப்பலத்தை பெற்றுத் தருமாறு நாம் மக்களிடம் கேட்டோம். மக்கள் அதற்கான ஆதரவினை வழங்கியபோதும் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்திற்குச் சொற்ப ஆசனங்கள் குறைவாகவே கிடைத்தது.

ஆனால், அதனை நாம் பாராளுமன்றத்தில் பெற்றுக்கொள்வோம் என்றார். (6-4)

# மணிவிழா

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்க உறுப்பினர்கள் நடத்தும் வட மாகாண சாரண ஆணையாளர் த.நா.போஜனின் மணிவிழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் சாரண கிளைச்சங்க தலைவரும் வலிகாம வலயக் கல்விப் பணிப் பாளருமான ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அதிபர் வணபிதா அ.யோ.யேசுதாஸ் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

வாழ்த்துரையை உதவிப் பிரதம சாரண ஆணையாளர் எம்.எஸ்.எம்.முகீட், யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம்,யாழ். பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் ம.பிரதீபன், தெல்லிப்பளைக் கோட்டக்கல்விப்பணிப்பாளர் ச.கைலாசநாதன் ஆகியோர் வழங்கவுள்ளனர். (4)

# திருத்தி வாசிக்கவும்

அகில இலங்கை தமிழ்மொழித்தின மாவட்ட,மாகாணப் போட்டிகள் எதிர்வரும் 2 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

நேற்றையை தினம் வலம்புரியின் 2ஆம் பக்கத்தில் வெளியான செய்தியில் 5ஆம்திகதியென தவறுதலாக பிரசுரிக்கப்பட்டு விட்டது. எனவே இதனை திருத்தி வாசிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

# அரசியல் சாசன திருத்தங்களின் போது ஆணைக்குழுக்களுக்கு கூடுதல் அதிகாரம்

(கொழும்பு)

அரசியல் சாசன திருத்தங்களின் போது ஆணைக்குழுக்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்கப்படவுள்ளதாக லக்பிம செய்தி வெளியிட்டுள்ளது.

நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழு, லஞ்ச ஊழல் ஆணைக்குழு, அரச சேவைக் குழு போன்ற ஆணைக்குழுக்களுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போது செயலிழந்து காணப்படும் பல ஆணைக்குழுக்களை மீளவும் இயங்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனக் குறிப்பிடப்படுகிறது.

மேலும்நாட்டின் அபிவிருத்திப் பணிகளுக்கு இடையூறாக அமைந்துள்ள சகல சரத்துக்களையும் அரசியல் சாசனத்திலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (6)

# ஜனாதிபதி - ரொபர்ட் ஓ பிளேக் பூட்டானில் சந்தித்து கலந்துரையாடல்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை தென் மற்றும் மத்திய ஆசியாவுக்கான அமெரிக்காவின் பிரதிச் செயலாளர் ரொபர்ட் ஓ பிளேக் நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். பூட்டானில் இடம்பெறும் 16 ஆவது சார்க் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக மஹிந்த ராஜபக்ஷவுக்கும் ரொபர்ட் ஓ பிளேக்குக்கும் இடையில் மேற்படி சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் அண்மையில் இடம்பெற்ற தேர்தல் ஆகியன தொடர்பில் இவர்கள் இருவருக்கும் இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றிருப்பதாக ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது. (6)

# சுற்றாடலை பாதுகாக்க அனைத்து மக்களினதும் ஒத்துழைப்பு அவசியம்

**சுற்றாடல் அமைச்சர் அநுரபிரியதர்சன யாப்பா**

(கொழும்பு)

சுற்றாடல் அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா நேற்று தமது பணியை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்துள்ளார்.

தேசிய ரீதியாக நாட்டுக்கு குந்தகம் விளைவிக்கும் சுற்றாடல் தொடர்பான சட்டங்களை சீர்ப்படுத்தி மக்களை சுற்றாடலைப் பாதுகாக்கும் குழுவினராக மாற்றுவது தமது நோக்கமாகும் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சுற்றாடலைப் பாதுகாப்பதன் மூலம் இலங்கையை அழகான நாடாக்க முடியும் என்று அவர் கூறினார்.

சுற்றாடல் கைத்தொழில் மீது ஏற்படும் அழுத்தங்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்த அவர், சுற்றாடலைப் பாதுகாப்பதற்கு அனைத்து மக்களினதும் ஒத்துழைப்பும் அவசியமானதாகும் எனவும் குறிப்பிட்டார். (6-4)

# மீள்குடியேற்ற அமைச்சர் வவுனியாவுக்கு விஜயம்

மீள் குடியேற்ற அமைச்சர் மில்ரோய் பெர்ணாண்டோ வவுனியாவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார். தமது கடமைகளை நேற்று முன்தினம் உத்தியோக பூர்வமாக ஏற்றுக்கொண்ட அமைச்சர் மீள்குடியேற்ற நடவடிக்கைகளை கண்டறியும் முகமாக வவுனியா பிரதேசத்திற்கு விஜயம் செய்தார்.

இடம்பெயர்ந்துள்ள மக்கள் எதிர்வரும் மோதங்களுக்குள் முழுமையாக மீள்குடியமர்த்தப்பட்டு விடுவார்கள் என்று அமைச்சர் கூறினார். இதேவேளை அம்மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்வுள்ளதோடு அவர்களின் பொருளாதாரத்தை உறுதிப்படுத்த முதலிடம் வழங்கப்படும் எனவும் தெரிவித்தார். இவ் விஜயத்தின் போது அவர், அம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் தேவைகள் சம்பந்தமாகவும் கலந்துரையாடினார். (6-4)

# தாய்நாட்டைக் கருத்திற் கொண்டு அனைவரும் செயற்பட வேண்டும்



**ரோஹித போகொல்லாகம**

(கொழும்பு)

தாய்நாட்டை கருத்திற் கொண்டு அனைவரும் செயற்பட வேண்டுமென முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரோஹித்த போகொல்லாகம கோரிக்கைவிடுத்துள்ளார்.

தீர்மானமிக்க இந்தத் தருணத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கரங்களைப் பலப்படுத்த அனைவரும் அணிதிரள வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேசமே உலக மயமாக்கலுக்கு உட்பட்டு வரும் இந்தத் தருணத்தில் வெளிநாடுகளுடன் சுமூகமான உறவைப் பேணி அதன் மூலம் நாட்டை அபிவிருத்தி செய்ய அனைவரும் கவனம் செலுத்த வேண்டும் என அவர் குறிப்பிட்டுள் ளார்.

வெளிவிவகார அமைச்சிலிருந்து பிரியாவிடை பெற்றுச் சென்ற போது அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார். (6)

# சகல இன சமூகங்களையும் ஒரே விதமாகவே நோக்குகின்றோம்

**மல்வத்து பீடாதிபதி**

(கொழும்பு)

மகா சங்கத்தினர் சகல இன சமூகங்களையும் ஒரே விதமாகவே நடத்துவதாக மல்வத்து பீடாதிபதி திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த தேரர் தெரிவித்துள்ளார்.

பௌத்தர்கள், இந்துக்கள், முஸ்லிம்கள் மற்றும் ஏனைய சமூகத்தினருக்கு மகா சங்கத்தினர் எதுவித பாரபட்சமும் காட்டுவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதனை முதனிலை நோக்கமாகக் கொண்டு அனைவரும் செயற்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். பிரித்தானியாவிற்கான உயர்ஸ்தானிகர் பீட்டர் ஹெய்ஸ், மல்வத்து பீடாதிபதியை சந்தித்த போது இந்த விடயங்களை மாநாயக்க தேரர் குறிப்பிட்டுள்ளார். (6)


உடனடி வெளிநாட்டு வேலைவாய்ப்பு

மலேசியா

MALAYSIA

உற்பத்தி தொழிலாளர்கள்

Electronic Factory Workers

ஆசியாவில் உள்ள அழகுமிக்க நாடாகிய மலேசியாவிற்கு உற்பத்தி தொழிலாளர்கள் உடனடியாகத் தேவைப்படுகிறார்கள். இது சிங்கபூரை தலைமையாகக் கொண்ட பிரபல்யமான கம்பனி.

வெற்றிடங்கள் 50 ஆண்கள்

Core business is Design, Manufacture and Distribution of FPCS and PCB & Turnkey Component , Assembly Services for FPCs.

**This is a ISO 9002 Certified Company.**

மாத சம்பளம் RM650.00 (1RM@ ரூபா.34/-)

மேலதிக வேலை நேரம் (Over Time) கொடுப்பனவும் உண்டு

| | | | |
|---|---|---|---|
| 8 Hours Duty | = RM 546.00 | Over Time Rates | |
| Special Allowance for Food | = RM 52.00 | Normal working days - per hour | = RM 4.68 |
| Attendance Allowance | = RM 52.00 | Sunday - per hour | = RM 6.25 |
| Monthly Salary | = RM 650.00 | Special holidays - per hour | = RM 9.37 |

ஒரு நாளைக்கு சராசரியாக 3 மணித்தியாலங்கள் ஓவர்ரைம் செய்தால் RM 4.68 x 3 = RM 14.04

26 நாட்களுக்கு 3 மணித்தியாலங்கள்படி ஓவர்ரைம் செய்தால் RM 14.04 X 26 = RM 365.04

| | |
|---|---|
| Basic salary | = RM 650.00 + |
| Over Time | = RM 365.00 |
| Total Monthly Income | = RM 1015.00 |

மாத மொத்த வருமானம் இலங்கை ரூபா

RM 1015 x ரூபா.34.00 = ரூபா.34,510/-

மலேசியா அரசாங்க வரி (Government Levy) அறவிடப்படமாட்டாது.

வயது: 21+ தொடக்கம் 32 வரை.

ஒப்பந்தக்காலம் 3 வருடங்கள் (புதுப்பிக்கத்தக்கது)

தயவுசெய்து இங்கு குறிப்பிடும் தொலைபேசி மூலம் எமது MR.R.Guna (குணா) என்பவருடன் தொடர்பு கொண்டு எமது கம்பனிக்கு நேர்முகப் பரீட்சைக்கு கொழும்பு வரவும்.

மொபைல்: 077-826 3228 (யாழ்ப்பாணம்).

நேர்முகப் பரீட்சை மே மாதம் 3, 4, 5ம் திகதிகளில் நடைபெறும்.

Interviews on 3rd, 4th & 5th May, 2010

நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்படுபவர்கள் உடனடியாக கொழும்பில் மெடிகல் ரெஸ்ட் (Medical Test) செய்ய வேண்டும். கொழும்பில் உள்ள மலேசிய உயர்ஸ்தானிகராலயத்தால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ நிறுவனத்தில் மட்டுமே மெடிகல் செய்யலாம். தொழில் விசா எடுப்பதற்கு மெடிகல் ரெஸ்ட் ரிப்போட் அவசியம். வரும்பொழுது தங்களது பாஸ்போட் மற்றும் 10 பாஸ்போட் அளவு கலர் போட்டோ (White Background) உடன் வரவும்.

**Terms & Conditions**

Free Accommodation, Food allowance is included in the salary & Medicals. Free Uniform & Air Passage after completion of contract period. Period of Contract three (3) years (Renewable). Other terms & conditions will be as per Malaysian Government Labour Laws.

கடந்த 15 வருடங்களாக எமது நிறுவனம் மத்திய கிழக்கு நாடுகளுக்கும், மலேசியா, குர்திஸ்தான் மற்றும் பல நாடுகளுக்கும் சிறந்த கம்பனிகளுக்கு ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்பை பெற்றுக் கொடுத்துள்ளோம் என்பதை பெருமையுடன் அறியத்தருகிறோம்.

TRANSSTAR

INTERNATIONAL TRAVELS & TOURS (PVT) LTD.,

375, Second Floor, Dam Street, Colombo 12.

(375, 2ம் மாடி, டாம் வீதி, கொழும்பு-12)

Tel: 011 - 2 386 824 Mobile: 077-826 3228


S.L.Bureau Labour Licence : 1311.

S.L.Bureau Approval AL/1311/Advt/03/10.

(Near Hulftsdorp Courts - Colombo)

(ஹல்ஸ்டொர்ப் நீதிமன்றங்களுக்கு அருகாமையில்)

(டாம் வீதியில் உள்ள ஹல்ஸ்டொர்ப் தபால் நிலையத்திற்கு அடுத்த கட்டிடம்)





ஊரெழு கிழக்கு நாவலம்பதி ஞானவைரவர் ஆலய வருடாந்த இரதோற்சவ நிகழ்வில் வசந்த மண்டபப்பூசை இடம்பெறுவதையும், சுவாமி தேரில் ஆரோகணிப்பதற்காக எழுந்தருளி வருவதையும், தேரில் ஆரோகணிப்பதையும் படங்களில் காணலாம்.

## மேதினப் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய சோசலிச முன்னணி தொழிற் சங்கங்கள் இணைந்து நடத்தும் ஐக்கிய மேதினப் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 1.45 மணிக்கு யாழ்.ப.நோ.கூ.சங்க கட்டடத்தில் தோழர் து.குகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் ஐக்கிய சோசலிச முன்னணித் தோழர்களும் தொழிற்சங்க பிரமுகர்களும் உரையாற்றவுள்ளார்கள். (6-4)

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கான சர்வதேச அபாக்காஸ் பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட முன்பள்ளி அசிரியர் ஒன்றியம் யாழ்.வர்த்தக தொழிற்துறை வேளாண் மகளிர் ஒன்றியத்துடன் இணைந்து GAMA அபாக்காஸ் நிறுவனத்தின் ஊடாக யாழ் மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கும் விசேட பயிற்சி உடுவில் வீதி மானிப்பாயில் அமைந்துள்ள ஒன்றியக் கருத்தரங்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 முதல் 12.30 மணி வரை வடமராட்சி கிழக்கு முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் 1.30 முதல் 5.30 மணி வரை வலி தென் மேற்கு முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் 12.30 மணி முதல் வடமராட்சி வடக்கு முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் இப்பயிற்சி நடைபெறவுள்ளது. (6-4)

## ஸ்ரீ அம்மா பகவான் பாத பூசை

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீக பிரார்த்தனை மையத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அம்மா பகவான் பாதபூசை நிகழ்வு இடம் பெறவுள்ளது.

இதில் அடியார்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு மேற்படி மையத்தினர் கேட்டுக்கொள்கின்றனர். (6-4)

## 524 ஆவது படைப்பிரிவின் புத்தாண்டு விளையாட்டு விழா

(வடமராட்சி)

இலங்கை இராணுவத்தின் 524 படைப் பிரிவின் 3ஆவது சிங்க றெஜீமன்ற் பிரிவு நடாத்தும் சித்திரை புத்தாண்டு விளையாட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை குஞ்சர் கடை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இவ் விளையாட்டு நிகழ்வில் இருபாலாருக்கான மரதன் ஓட்டம், ஆண்கள், பெண்கள், சிறுவர் சிறுமியருக்கான அழகு போட்டிகள் மற்றும் மாலை நிகழ்வுகளாக இசை நிகழ்ச்சிகள் என்பன இடம்பெறவுள்ளன.

இவ் விளையாட்டு நிகழ்வுகள் நெஸ்ரமோல்ட், டயலொக் நிறுவனங்கள் அனுசரணையில் இடம்பெறவுள்ளது. (ச-9,24)

## ஆற்றல் திறன் வலுவூட்டல் வதிவிடப் பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தினால் கிராம மட்ட தலைவர்களுக்கான ஆற்றல் திறன் வலுவூட்டல் வதிவிடப் பயிற்சி நெறி நேற்று ஆரம்பமாகி இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் நடைபெறும் இப் பயிற்சிநெறி சமூக அடிப்படையிலான குழுக்களும், உருவாக்கமும், சமூக மட்ட அமைப்புக்களுக்கான திட்டமிடலும் முகாமைத்துவமும், சமூக அபிவிருத்தியில் சமூக மட்ட அமைப்புக்களின் வகிபங்கு போன்ற தலைப்புக்களை மையப்படுத்தி நடத்தப்படவுள்ளது. (6-4)

## விளையாட்டுப் போட்டி

(வடமராட்சி)

கரவெட்டி.பிரதேச செயலக விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 2 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு இமையாணன் வியைாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

கரவெட்டி பிரதேச செயலக செயலாளர் எஸ்.சத்தியசீலன் தலைமையில் இப்போட்டிகள் இடம்பெறவுள்ளது. (ச-9-24)




## சக பயணியின் பணத்தை திருடியவர் வசமாக மாட்டிக் கொண்டார்

(யாழ்ப்பாணம்)

வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த பேருந்தில் பயணி ஒருவரின் றொக்கப் பணத்தை களவாடிய இளைஞர் ஒருவர் சக பிரயாணிகளிடம் வசமாக மாட்டிக்கொண்டார்.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் மாலை யாழ். நோக்கி வந்த பேருந்தில் பரந்தன் சந்தியில் வைத்து வயோதிபரும் இளைஞனும் ஏறினர்.

சிறிது நேரத்தின் பின் அவ் வயோதிபர் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தபோது, அவரின் பொக்கற்றிலிருந்த பணத்தை எடுத்துக் கொண்டு பஸ்ஸிலிருந்த இறங்க முற்பட்ட இளைஞன் அதை அவதானித்த சக பிரயாணிகளிடம் மாட்டிக் கொண்டார்.

இதையடுத்து இளைஞன் திருடிய பணத்தை மீளப்பெற்று அவ் வயோதிபரிடம் ஒப்படைத்ததுடன் இளைஞன் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டார். (6-30)

## மாகாண மட்ட தொழிற்துறை கண்காட்சி அடுத்த மாதம் யாழ்.மத்திய கல்லூரியில்

(யாழ்ப்பாணம்)

தொழிற் துறைத் திணைக்களமும் கிராம அபிவிருத்தித் திணைக்களமும் இணைந்து நடாத்தும் மாகாண மட்ட கண்காட்சி அடுத்த மாதம் 27,28,29,30 ஆகிய திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக் கண்காட்சியில் காட்சிக்கூடங்களை அமைத்து தமது கைப்பணிப்பொருட்களை காட்சிப்படுத்தும் விற்பனை நிறுவனங்களினை எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட அலுவலக தொழிற்துறை திணைக்களத்துடனோ அல்லது 021 222 9943 எனும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்புகொள்ளும்படி மாவட்ட அலுவலர் திருமதி பொலின் பெனராஜ் கேட்டுக்கொள்கின்றார்.

மேலும் இக் கண்ககாட்சியில் மட்பாண்டத் தொழில், புல்நார் வகைப் பொருட்கள், உலோக கைப்பணிப்பொருட்கள், ஆபரணங்கள், முகமூடி , சங்கீத உபகரணங்கள், பிரம்பு, மூங்கில் சம்பந்தமானவை, மரப்பாவனை, சித்திரமும் சிலைகளும், தென்னை பனை உற்பத்தி, மரவேலை, பிறேம் வேர்க்ஸ், வேறு சார் கைப்பணிப்பொருட்கள் ஆகிய பொருட்களை காட்சிப்படுத்த விரும்பும் தனிப்பட்ட நபர்கள் அந்தந்தப் பகுதியின் பிரதேச செயலகங்களிலுள்ள தொழிற்துறை திணைக்கள நிகழ்ச்சித் திட்ட உதவியாளரிடம் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது. (6-30)

## உரும்பிராய் இந்துக் கல்லூரியின் வித்தியா சஞ்சிகை வெளியீடும் ஸ்தாபகர் நினைவும் பரிசில் நாளும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.உரும்பிராய் இந்துக் கல்லூரியின் வித்தியா சஞ்சிகை வெளியீடும் ஸ்தாபகர் நினைவும் பரிசில் நாளும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரிப் பிரார்த்தனை மண்டபத்தில் கல்லூரி முதல்வர் அ.ஈஸ்வரநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்லூரி பழைய மாணவரும் லண்டன் தொழிலதிபருமான கந்தசாமி தர்மகுலசிங்கம் தம்பதியினர் கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையின் பாடசாலை வேலைப்பகுதி பொறியியலாளர் குணரட்ணம் சிவபாலன், கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சின்னத்தம்பி சித்திரவடிவேல் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

மேலும் இந்நிகழ்வில் ஸ்தாபகர் தினப் பேருரையை கல்லூரியின் பழைய மாணவரும் இராமநாதன் கல்லூரியின் ஓய்வு பெற்ற உப அதிபருமான வை.பாலேந்திரா வழங்கவுள்ளார். அத்துடன் வித்தியா சஞ்சிகை ஆய்வுரையை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் கலாநிதி செல்லையா திருநாவுக்கரசு வழங்கவுள்ளார்.

விசேட நிகழ்வாக புதிய கலையரங்குக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் இடம் பெறவுள்ளது. மேலும் கல்லூரி மாணவர்களின் வரவேற்பு நடனம், கிராமிய நடனம், தனி இசை, குழு இசை, "பெண் அடிமை" நாடகம் ஆகிய கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (6-4)

## பெண்ணின் சங்கிலியை அபகரித்த யுவதி பொதுமக்களால் மடக்கிப்பிடிப்பு

(யாழ்ப்பாணம்)

பேருந்தில் பயணம் செய்வதற்கு பஸ் நிலையத்தில் காத்திருந்த பெண்ணின் சங்கிலியை அபகரித்துக் கொண்டு செல்ல முற்பட்ட யுவதியை பொதுமக்கள் மடக்கிப் பிடித்தனர்.

நேற்றுக் காலை கல்வியங்காட்டு பஸ் நிலையத்தில் இடம்பெற்ற மேற்படி சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

குறித்த பெண் பஸ் நிலையத்திற்கு வந்த சமயம் யுவதியும் அங்கு வந்து நின்றார்.

பெண்ணருகே சென்ற யுவதி சங்கிலியை அறுத்துக் கொண்டு செல்ல முற்படுகையில் அப்பெண் சத்தமிட்டார்.

இதையடுத்து அப்பகுதிக்கு விரைந்து வந்த பொதுமக்கள் யுவதியை மடக்கிப் பிடித்தனர். (6-30)

# ஏகோனின் இசை நிகழ்ச்சிக்கான நுழைவுச் சீட்டுக் கட்டணம் மீளளிப்பு

(கொழும்பு)

பிரபல பொப்பிசைப் பாடகர் ஏகோனின் இசை நிகழ்ச்சியை முன்னிட்டு விற்பனை செய்யப்பட்ட நுழைவுச் சீட்டுக்களுக்கான கட்டணங்கள் மீளச் செலுத்தப்படவுள்ளன.

பௌத்த மதத்தை காயப்படுத்தும் வகையிலான இசை ஆல்பம் ஒன்றில் தோன்றிய காரணத்திற்காக ஏகோன் இலங்கைக்கு அனுமதிக்கப்படக்கூடாது என எதிர்ப்பு வெளியிடப்பட்டிருந்தது.

இதன்காரணமாக இந்த மாதம் நடைபெற விருந்த இசை நிகழ்ச்சி இரத்து செய்யப்பட்டது.

இதேவேளை இசை நிகழ்ச்சிக்காக விற்பனை செய்யப்பட்ட நுழைவுச் சீட்டுக்கான கட்டணங்களை மீளச் செலுத்தும் நடவடிக்கை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக விழா ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6)

# சிறு தொழிலுக்கான உள்ளீடுகள் கையளிப்பு

கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தின் வாழ்வாதார செயற்திட்டப் பிரிவினால் வரணி, இயற்றாலை,நாவற்காடு,கெற்பெலி,கச்சாய் அகிய இடங்களைச் சேர்ந்த 20 பயனாளிகளுக்கு இன்று வியாழக்கிழமை தச்சுவேலை, சிறுகடை, தையல், சைக்கிள் திருத்தகம், கோழிவளர்ப்பு மற்றும் மீன்வியாபாரம் போன்ற சிறு கைத்தொழில்களை மேற்கொள்ள அவற்றிற்கான உள்ளீடுகள் மற்றும் மூலதனமாக ஒவ்வொரு பயனாளிக்கும் தலா 30 ஆயிரம் ரூபாய் வீதம் வழங்கப்படவுள்ளதாக கரித்தாஸ்-கியூடெக் நிறுவன தகவல் பிரிவு பொறுப்பாளர் பெகின் அறிவித்துள்ளார். (6-4)


## மின் பாவனையாளர்களின் கவனத்திற்கு

யாழ். மாவட்ட மின்பாவனையாளர்களின் நன்மை கருதி மின்கட்டணங்களை செலுத்துவதற்காக பின்வரும் மக்கள் வங்கிக்கிளைகளில் Online மூலம் இயங்கும் விசேட கரும பீடங்கள் திறக்கப்பட்டுள்ளன.

மக்கள் வங்கி சுன்னாகம்
மக்கள் வங்கி நெல்லியடி
மக்கள் வங்கி சாவகச்சேரி

மேற்படி கருமபீடங்களில் மின்கட்டணங்களாக செலுத்தும் தொகை உடனடியாகவே அவர்களது கணக்கில் வரவு வைக்கப்படும். இந்தக் கருமபீடங்கள் இன்று 29.04.2010 இல் சம்பிரதாயபூர்வமாக இலங்கை மின்சார சபை உயர் அதிகாரிகளாலும் மக்கள் வங்கி உயர் அதிகாரிகளாலும் திறந்துவைக்கப்படும்.

பிரதிப் பொதுமுகாமையாளர் (வடமாகாணம்)
இலங்கை மின்சார சபை,
யாழ்ப்பாணம்.

(C-164)


# மக்களுக்கு நன்மை பயக்கும் அரசின் யோசனைகளுக்கு ஐ.தே.க.ஆதரவளிக்கும்

## கரு ஜயசூரிய தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் பாராளுமன்றத்தில் முன்வைக்கும் மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய யோசனைகளுக்கு எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி முழுமையான ஆதரவு நல்கும் என்று அக்கட்சியின் உபதலைவரும் கம்பஹா மாவட்ட எம்.பி.யுமான கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய அரசாங்கத்தின் யோசனைகளுக்கு ஆதரவு அளிப்பது என்பதில் நாம் உறுதியாகவுள்ளோம் எனவும்அவர் குறிப் பிட்டார்.

இதற்காக அரசாங்கம் முன் னெடுக்கும் வேலைத் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு நல்குவோம்.



பாராளுமன்றத் தெரிவுக் குழுக்களினதும் பாராளுமன்ற ஆலோசனைக் குழுக்களினதும் செயற்பாடு களுக்கும் முழுமையாக ஆதரவு அளிப்போம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (6-4)

# வவு.மாணவி கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர் நீரில் மூழ்கி மரணம்

(கொழும்பு)

வவுனியா திருநவாற்குளம் பிரதேசத்தில் கடந்த 20 ஆம்திகதி இரவு இடம்பெற்ற மாணவியின் கொலையுடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்பட்டு கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நீரில் மூழ்கி மரணமான சம்பவம் குறித்து வவுனியா மாவட்ட நீதவான் சம்பவ இடத்திற்கு நேற்று முன்தினம் சென்று விசாரணைகளை நடத்தினார்.

சந்தேக நபர் வழங்கி தகவலின் பேரில் புதைத்து வைக்கப்பட்டுள்ள ஆயுதங்களைக் காண்பிக்கும் பொருட்டு கல்மடுவுக்கு அழைத்துச் செல்லப்பட்டபோது கைவிலங்குடன் தப்பியோடும் முகமாக கல்மடு குளத்தில் குதித்தபோது நீரில் மூழ்கி மரணமாகியுள்ளார் எனப் பொலிஸார் நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பித்திருந்தனர்.

நேற்று முன்தினம் 9 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா மாவட்ட நீதிவான் முன்னிலையில் சடலம் குளத்திலிருந்து மீட்கப்பட்டு வவுனியா பொதுவைத்தியசாலை சவச்சாலைக்கு பொலிஸாரினால் எடுத்து வரப்பட்டுள்ளது.

மாணவியின் கொலை தொடர்பாக மேலும் இருவர் கைதாகியுள்ளதாகவும் பொலி ஸார் தெரிவித்துள்ளனர். (6-4)


# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 16.05.1947 மறைவு 21.04.2008

அமரர்

## திருமதி ஸ்ரீநகுலமீரா சிதம்பரநாதன்

திதி: அபரபக்க பிரதமை

எத்தனை செல்வங்கள் வந்தென்ன
எத்தனை இன்பங்கள் இருந்தென்ன
கண் எதிரே நீங்கள் இல்லை அம்மா
கண்ணீரில் கரைகிறதே ஆண்டுகள்
எத்தனை ஆண்டுகள் ஆனால் என்ன
எங்களை விட்டு உங்கள்
நினைவுகள் அகலாது

கனத்த இதயத்துடன்
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

(1267)

# கொழும்பு றோயல் கல்லூரி


## கல்வி பொதுத்தராதர உயர்தரப்பரீட்சை-2010

## வழிகாட்டல் பரீட்சை

### பொருளியல்-I-I Economics I-I

*1 மணித்தியாலங்கள்* *1 Hours*

14.சந்தைப் பொருளாதாரம் ஒன்றில் பண்டம் தொடர்பான கேள்வி நிரம்பல் வளையிகளை பின்வரும் வரைபடம் விளக்குகின்றது.
அரசாங்கம் 15/- ஐ கீழ் மட்ட விலையாக நடைமுறைப்படுத்தியது. ஆனால் இதை தொடர் வதற்கு உரிய நடைமுறைகளை அரசாங்கம் அமுல்படுத்த வில்லை. உற்பத்தியாளர் வருமானத்திற்கும் செலவுக்கும் யாது நிகழும்?




| வருமானம் | செலவு |
|---|---|
| 1.குறையும் | கூடும் |
| 2.மாற்றமில்லை | கூடும் |
| 3.கூடும் | கூடும் |
| 4.கூடும் | குறையும் |
| 5.குறையும் | குறையும் |

15.எளிய பொருளாதாரமொன்றின் எல்லை நுகர்வு நாட்டம் 08. எல்லை சேமிப்பு நாட்டம் 02. முதலீட்டு மற்றும் வரி பெருக்கிகளானது,

| முதலீட்டு பெருக்கி | வரிபெருக்கி |
|---|---|
| 1.5.0 | 04 |
| 2.5.0 | -4.0 |
| 3.-0.5 | -04 |
| 4.1.2. | -1.2 |
| 5.-1.2 | 1.2 |

16.கேள்வித்தொகை அதிகரிப்பானது நெகிழ்ச்சியற்ற கேள்வியிலும், நெகிழ்ச்சியுள்ள கேள்வியிலும் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும்.

| நெகிழ்ச்சி உள்ள கேள்வி | நெகிழ்ச்சியற்ற கேள்வி |
|---|---|
| 1.குறையும் | குறையும் |
| 2.கூடும் | குறையும் |
| 3.கூடும் | கூடும் |
| 4.மாற்றமில்லை | மாற்றமில்லை |
| 5.குறையும் | கூடும் |

17.காரணி உழைப்பின் சரியான கூற்று யாது?
- MRP-எல்லை வருமான உற்பத்தி
- MFC-எல்லை நிலையான செலவு

1.MRP=MFC உச்ச மட்டம்
2.MRP<MFC வேலைவாயப்பில் அதிகரிப்பை ஏற்படுத்துவதால் இலாபங்களை அதிகரிக்க முடியாது
3.MRP<MFC வேலைவாய்ப்புக்களை அதிகரிப்பதால் இலாபத்தை அதிகரிக்க முடியும்
4.MFC ஆனது நிலைக்குத்து அச்சுக்கு சமாந்தரமானது
5.MFC இன் சாய்வு நேர்கணியம்

18.அனுமான பொருளாதாரமொன்றின் தகவல்கள் உமக்கு கீழே தரப்பட்டுள்ளது.
- மெய் மொத்த உள்ளூர் உற்பத்தி = ரூபா 12000மில்லி
- உள்ளார்ந்த விலைச்சுட்டெண் = ரூபா 0.75

நடைமுறைவிலையில் மொத்த உள்ளூர் உற்பத்தி
1. ரூபா 8000 2. ரூபா 10000 3. ரூபா 16000
4. ரூபா 12000 5. ரூபா 7000

19. எளிய பொருளாதாரமொன்றின் கூட்டிய நுகர்வு சார்பானது

$$C=50+0.8y$$

இப் பொருளாதாரத்தின் திட்டமிட்ட முதலீடு ரூபா 70 மில்லியன் .இப் பொருளாதாரத்தின் சம நிலை வெளியீட்டு மட்டம் யாது?
1.ரூபா.400மில்லி
2.ரூபா 600 மில்லி
3.ரூபா 250 மில்லி
4.ரூபா 500 மில்லி
5.ரூபா 850 மில்லி

20.பொருளாதாரமென்றின் வருமானம் மற்றும் நுகர்வு உமக்கு தரப்பட்டுள்ளது.

| வருமானம் | 0 | 100 | 200 |
|---|---|---|---|
| நுகர்வு | 100 | 230 | 210 |

இப்பொருளாதாரத்தின் நுகர்வு தொழிற்பாடானது.
1. $C=0.8y$
2. $C= 100+0.8y$
3. $C= -100+0.8y$
4. $C= 50+0.8y$
5. $C= -50+0.2y$

### பொருளியல்-I-II Economics I-II

*2 மணித்தியாலங்கள்* *2 Hours*

ஒவ்வொரு பகுதியில் இருந்தும் இரண்டு வினாக்கள் தெரிவு செய்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.

#### பகுதி -A

**01.**1.பொருளாதார முறைமையொன்றின் நிறுவனரீதியான பண்புகள் யாவை? (04 புள்ளிகள்)
2.கடந்த காலங்களில் பொருளாதார முறைமைகளின் பண்புகளில் ஏற்பட்ட படிப்படியான மாற்றங்களை விளக்குக? (04 புள்ளிகள்)
3.அடிப்படை பொருளாதார வினாக்களை தீர்ப்பதற்கு பொருளாதார முறைமையானது ஓர் அமைப்பு ரீதியான நிகழ்ச்சிதிட்டம் என விளக்கப்பட்டுள்ளது. இவ் நிகழ்ச்சி திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள முக்கிய காரணிகள் யாவை? (03 புள்ளிகள்)
4.கட்டளை பொருளாதார முறைமையில் உள்ள குறைபாடுகள் யாவை? (04 புள்ளிகள்)

**02.**1.பொருளாதாரத்தின் வளங்களின் பயன்பாடுகள் தொடர்பில் தெரிவுகள் மற்றும் தெரிவுகளின் விளைவுகளை விளக்கும் எளிய மாதிரி யாது? அதற்கான கருதுகோள்கள் யாவை? (03 புள்ளிகள்)
2.பொருளாதார வினைத்திறனை அடைவதற்கான நிபந்தனைகள் யாவை? (02 புள்ளிகள்)
3.நிலைக்குத்து அச்சில் மென்பொருளையும் கிடை அச்சில் செலூலர் தொலைபேசியையும் குறிக்கும் குவிவான உற்பத்தி சாத்திய வளையியை வரைக?
பின்வரும் விருத்திகளை எவ்வாறு உற்பத்தி சாத்திய வளையியில் விளக்குவீர்.
a. இரு நிறுவனங்களிலும் ஊழிய உற்பத்திறன் அதிகரிப்பு
b. உற்பத்தி சாத்திய வளையியில் X எனக் குறிக்கப்பட்டுள்ள நடுப்புள்ளியில் இரு நிறுவனங்களிலும் நிலவும் நிறைதொழில் மட்டம் இரு உற்பத்திகளுக்குமான மொத்த கேள்வியானது 50% குறைவடைந்துள்ளது. இதனை புள்ளி y இன் மூலம் விளக்குக.
c. நீண்ட கால பொருளாதார பின்னடைவினால் இரு நிறுவனங்களையும் ஆய்வுகளுக்கோ அபிவிருத்தி நோக்கங்களுக்கோ பயன்படுத்த முடியாமை
d. பொருளாதாரத்தில் உற்பத்திறன் இடைவெளி Z ஆகக் காணப்படல்
e. சாத்தியமான வெளியீட்டு மட்டம் (02x05=10 புள்ளிகள்)

**03.**கீழ் நோக்கி சாயும் கேள்விவளையியில்,
1. விலைசார் கேள்வி நெகிழ்ச்சியானது முடிவிலியிலிருந்து பூச்சியம் வரை வேறுபடுகின்றது. இதனை நீர் எவ்வாறு விளக்குவீர் ? (03 புள்ளிகள்)
2.கேள்வி, கேள்விக்கோட்பாடு ,கேள்வி விதி என்பவற்றை வேறுபடுத்துக?(06 புள்ளிகள்)
3.விலைக்கும் நிரம்பல் தொகைக்கும் இடையே நேர்கணிய தொடர்பு காணப்படுவ தற்கான காரணங்கள் யாவை? (03 புள்ளிகள்)
4.சந்தைப் பொருளாதாரத்தில் அரசாங்கத்தின் தொழிற்பாடுகளை விளக்குக. (03 புள்ளிகள்)

**04.** அரிசிச் சந்தையின் கேள்வி மற்றும் நிரம்பல் சமன்பாடுகள் உமக்குத் தரப்பட்டுள்ளன.
கேள்வி சமன்பாடு $Qd=120-5p$
$Qs =10+5p$
1.மேற்கூறிய பொருளாதாரத்தின் கேள்வி மற்றும் நிரம்பல் வளையிகளை வரைக. (02 புள்ளிகள்)
2. சமனிலை விலை, தொகை என்பவற்றைக் கணிக்க. (02 புள்ளிகள்)
3. உற்பத்தியாளர் நன்மை கருதி அரசாங்கம் கோட்டா முறையை அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின் கீழ் உற்பத்தியாளர்களுக்கிடையில் உயர்ந்த பட்ச நிரம்பலாக 50 கிலோ கிராம் அரிசியை பகிர்ந்தளித்தது.
a) புதிய நிரம்பல் வளையியை வரைக. (02 புள்ளிகள்)
b) கோட்டாவை நடைமுறைப்படுத்திய பின் வினைத்திறனற்ற உற்பத்தியையும், வினைத்திறனற்ற வள ஒதுக்கீட்டை விளக்குக.
c) ஒரு கிலோ அரிசிக்கான விலையையும், உற்பத்திச் செலவையும் கணிக்க. (03 புள்ளிகள்)

#### பகுதி B

**05.**பொருளாதாரமொன்றின் கருதுகோள் ரீதியான தேசிய வருமான தகவல்கள் உமக்கு தரப்பட்டுள்ளது. எல்லாப் பெறுமதிகளும் மில்லியன் ரூபாயில்.

| | |
|---|---|
| தனியார் நுகர்வு | 40000 |
| மொத்த உள்ளூர் முதலீடு | 8000 |
| அரச கொள்வனவுகள் | 10000 |
| சம்பளமும் கூலியும் | 30000 |
| பொருள் ஏற்றுமதிகள் | 6000 |
| மூலதன தேய்வு | 2000 |
| பொருட்கள் இறக்குமதி | 8000 |
| வருமான வரி | 10000 |
| மாற்றல் கொடுப்பனவுகள் | 4000 |
| தேறிய வெளிநாட்டு காரணி வருமானம் | 5000 |
| இருப்பில் மாற்றம் | 1000 |
| விவசாயத்துறை | 5000 |
| வட்டிகள் | 16000 |

1.பொருத்தமான தகவலை பயன்படுத்தி பின்வருவனவற்றைக் கணிக்க.
1.மொத்த உள்ளூர் உற்பத்தி
2.தேறிய உள்ளூர் உற்பத்தி
3.மொத்த தேசிய உற்பத்தி
4.தேறிய முதலீடு
5.தேறிய தேசிய உற்பத்தி
6.செலவிடத்தகு மொத்த தேசிய உற்பத்தி (02X06=12புள்ளிகள்)
2.செலவீட்டு அணுகுமுறையில் உள்ளக்கப்படாத செலவீனங்கள் எவை? (03 புள்ளிகள்)

06.பின்வரும் தகவல்கள் உமக்குத் தரப்பட்டுள்ளீது.
நுகர்வு : $C =200+0.87$
முதலீடு : $I=500$
அரச செலவீடு : $G=800$
வரி : $T=0.2y$

# கொழும்பு றோயல் கல்லூரி

## கல்வி பொதுத்தராதர உயர்தரப்பரீட்சை-2010

## வழிகாட்டல் பரீட்சை

### பொருளியல்-I-II Economics I-II

*1 மணித்தியாலங்கள்* *1 Hours*

1. வருமான மட்ட சமநிலையைக் கணிப்பிடுக.
2. இப் பொருளாதாரத்தில் உட்பாய்ச்சல்களும் வெளிப்பாய்ச்சல்களும் சமன் என்பதை விளக்குக.
3. இங்கு ஏதாவது அரச மிகை அல்லது பற்றாக்குறை காணப்படுகிறதா?
4. வரி தொழிற்பாடு T=100+0.25y என மாற்றப்பட்டதாக கருதுக.

a. சமநிலை மட்டத்தைத் துணிக. (03 புள்ளிகள்)

b. பொருளாதாரத்தில் உட்பாய்ச்சல்கள் = வெளிப்பாய்ச்சல்கள் என விளக்குக. (04 புள்ளிகள்)

07.1. சந்தைப் பொருளாதாரத்தின் தோல்விகள் யாவை?

2. உச்ச மட்ட உற்பத்தி மற்றும் நுகர்வு தொடர்பாக பின்வருவனவற்றை நுகர்வோர் நோக்கியதாகவும் சமூக நோக்கியதாகவும் விளக்குக.

a. தனியார் பாவனைக்காக பயன்படுத்தப்படும் ஓர் வாகனம்.

b. சுற்றாடலில் கழிவுகளை கொட்டுதல்.

c. மீள் வனவாக்கத்திற்காக தாவர நாற்று மேடைகளை அமுல்படுத்தல்.

d. ஒரு பகுதியினர் தொற்று நோய்க்கு மருந்தெடுத்தல். (02X04= 08 புள்ளிகள்)

3. எதிர்க்கணிய வெளிவாரிகளின் தீமைகளை குறைப்பதற்கான மாற்று வழிமுறைகள் யாவை? (04 புள்ளிகள்)

08.1. வரி விதிப்பின் நோக்கங்கள் யாவை? (03 புள்ளிகள்)

2. அரச பாதீட்டின் முழுமொத்த பற்றாக்குறையையும் முதன்மை பற்றாக்குறையையும் வேறுபடுத்துக. (03 புள்ளிகள்)
3. பாதீட்டின் நீண்டகால பற்றாக்குறையின் விளைவுகள் யாவை? (03 புள்ளிகள்)
4. வரி வருமானத்தின் உணர்த்திறன் இணைவுக் குணகம் விளக்குக?
5. அரச வரிவருமானத்தின் பாதகமான விளைவுகளுக்கான காரணங்கள் விளக்குக? (03 புள்ளிகள்)

### பொருளியல்-II-I Economics II-I

*1 மணித்தியாலங்கள்* *1 Hours*

#### பகுதி -I

எல்லா வினாக்களுக்கும் விடை தருக. சரியான விடையினைத் தெரிவு செய்க.

01. பொதுமக்கள் பணத்தை பணமாகவே வைத்திருப்பதற்கான விருப்பத்தை குறிப்பது

1. பணநிரம்பல் 2. திரவத் தன்மை 3. திரவத்தன்மை முன்னுரிமை
4. பாதுகாப்பு நோக்கம் 5. பணச் சுருக்கி

02. 2008 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆம் ஆண்டுவரை மெய்மொத்த உள்நாட்டு உற்பத்தி நிலையானதாக இருக்க நுகர்வோர் விலைச்சுட்டெண் சரியாக இரு மடங்காகியதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 2008ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆம் ஆண்டு வரை பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி பற்றி வரக்கூடிய முடிபு. அது,

1. நிலையானதாக இருக்கும் 2. அரைவாசியாக குறைக்கப்படும்
3. அதுவும் இரண்டு மடங்காகும் 4. நான்கு மடங்காகும்
5. அதிகரிக்கும். ஆனால் நிச்சயமற்றது.

03. ஒதுக்குப்பணத்தின் கூறாக பின்வருவனவற்றுள் ஒன்று காணப்படுவதில்லை.

1. வணிக வங்கிகளிலுள்ள பொதுமக்களின் கேள்வி வைப்புக்கள்
2. பொதுமக்களிடம் உள்ள நாணயம்
3. வணிக வங்கியிலுள்ள நாணயம்
4. மத்திய வங்கியில் உள்ள வணிக வங்கிகளின் கேள்வி வைப்புக்கள்
5. மத்திய வங்கியிலுள்ள அரச பிரதிநிதித்துவ நிறுவனங்களின் கேள்வி வைப்புக்கள்

04. தேவைப்படும் ஒதுக்கு வீதத்தில் குறைப்பொன்றினை மத்திய வங்கி ஏற்படுத்துவதானது

1. வட்டி வீதங்கள் அதிகரிப்பதற்காக, பண நிரம்பல் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதற்காக.
2. வட்டி வீதங்களின் குறைப்பு மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் குறைப்பு, ஆனால் பண நிரம்பலை அதிகரிப்பதற்காக.
3. வட்டி வீதங்களை அதிகரித்தல், ஆனால் பண நிரம்பல் மற்றும் மொத்த உள் நாட்டு உற்பத்தியை குறைப்பதற்காக.
4. வட்டி வீதங்களைக் குறைத்தல், ஆனால் பண நிரம்பல் மற்றும் மொத்த உள் நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதற்காக.
5. வட்டி வீதங்கள், பண வீதங்கள் மற்றும் மொத்த உள் நாட்டு உற்பத்தியை குறைப்பதற்காக.

05. ஒரு பணவீக்க காலத்தில் இலங்கை மத்திய வங்கிக்கு பொருத்தமான நாணயக் கொள்கைகள் பின்வருவனவற்றுள் எது?

1. தேவையான ஒதுக்கு வீதத்தை குறைத்தல் 2. வங்கியின் கழிவு வீதத்தை குறைத்தல்
3. பண நிரம்பலை அதிகரித்தல்
4. பகிரங்க சந்தையில் அரச திறைசேரி உண்டியல் மற்றும் பிணைகளை விற்பனை செய்தல்
5. வரி வீதங்களை அதிகரித்தல்

06. இலங்கை நாணயத்தின் தேய்வானது

1. இலங்கையில் இருந்தான ஏற்றுமதி மற்றும் இலங்கைக்கான இறக்குமதி ஆகிய இரண்டையும் அதிகரிக்கும்.
2. இலங்கையில் இருந்தான ஏற்றுமதி இல்ங்கைக்கான இறக்குமதி ஆகிய இரண்டையும் குறைக்கும்.
3. இலங்கையில்இருந்துஏற்றுமதியைஅதிகரிக்கும். இலங்கைக்கானஇறக்குமதியைக்குறைக்கும்.
4. இலங்கையில் இருந்தான ஏற்றுமதியை குறைக்கும். இறக்குமதியை அதிகரிக்கும்.
5. ஏற்றுமதி மற்றும் இறக்குமதி ஆகிய இரண்டிலும் ஒரு வித தாக்கமும் இல்லை.

07. பின்வரும் தகவல்கள் உமக்கு கீழே தரப்பட்டுள்ளது.

| | ஊழியத்தின் ஒரு வருடத்திற்கான வெளியீடு | |
|---|---|---|
| | சுவீடன் | ஜேர்மன் |
| மோட்டார் வாகனம் | 03 | 02 |
| கணனி | 12 | 06 |

சுவீடன் பற்றி வரக்கூடிய முடிபு,

1. இரு பண்டங்களிலும் முழுமைத்தன்மையும் மற்றும் மோட்டார் வாகனத்தில் ஒப்பீட்டு அனுகூலம் மட்டும்.
2. இரு பண்டங்களிலும் முழுநன்மையும், கணனியில் ஒப்பீட்டு அனுகூலம் மட்டும்
3. இரு பண்டங்களிலும் முழுநன்மையும் மற்றும் ஒப்பீட்டு நன்மையும்
4. இரு பண்டங்களிலும்முழுநன்மையும், ஒப்பீட்டுநன்மையை ஒரு பண்டமும்கொண்டிருக்கவில்லை.
5. இரு பண்டங்களிலும் முழு நன்மையின் தீமையையும், இரு பண்டங்களிலும் ஒப்பீட்டு நன்மையும்

08. ஒரு வங்கியானது பாதுகாப்பாக கடன் வழங்கக்கூடிய ரூபாவின் தொகை அதன்,

1. தேவையான ஒதுக்குகளுக்கு சமனானது 2. மிகை ஒதுக்குகளுக்கு சமனானது
3. கேள்வி வைப்புக்கு சமனானது 4. பணத்துக்கு சமனானது 5. ஒதுக்குகளுக்கு சமனானதாகும்

09. 2010 ஆம் வருட இறுதியில் ஒரு U.S டொலரின் பெறுமதி 110 லிருந்து 102 இலங்கை ரூபா வாக மாற்றமடையுமென இலங்கை மத்தியவங்கி எதிர்வு கூறியுள்ளதாகக் கருதுக. மிதக்கும் நாணய மாற்று வீத நிர்வகிப்பின் கீழ் இருந்த மாற்றத்தை பிரதிபலிப்பது,

1. இலங்கை ரூபாவின் ஓர் பெறுமதித் தேய்வு
2. இலங்கை ரூபாவின் ஓர் பெறுமதி அதிகரிப்பு
3. இலங்கை ரூபாவின் ஓர் பெறுமதி இறக்கம்
4. இலங்கை ரூபாவின் ஓர் மறுமதிப்பீடு
5. உண்மை நாணய மாற்று வீதத்தின் மிகை அதிகரிப்பு

10. வணிக வங்கியில் ஒரு வைப்பாளர் நடைமுறைக் கணக்கிலிருந்த ரூபா 10000 பணத்தை மீளப் பெறும் போது அது,

1. வணிக வங்கியின் பொறுப்புக்களை குறைக்கும். ஆனால் வணிகவங்கியின் சொத்துக்களில் ஒரு தாக்கத்தையும் ஏற்படுத்தாது.
2. வணிக வங்கிகளின் சொத்துக்களை குறைக்கும். ஆனால் வணிக வங்கிகளின் பொறுப்புக்களில் ஒரு தாக்கத்தையும் ஏற்படுத்தாது.
3. வணிக வங்கியின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஆகிய இரண்டையும் குறைக்கும்.
4. வணிக வங்கியின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் ஆகிய இரண்டையும் அதிகரிக்கும்.
5. வணிக வங்கியின் சொத்துக்களிலோ அல்லது பொறுப்புக்களிலோ எதுவித தாக்கத்தையும் ஏற்படுத்தாது.

11. வட்டி வீதப்பாதை என்பதனால் வரையறுக்கப்படுவது,

1. தேவைப்படும் ஒதுக்கு விகிதத்தின் உயர்வும் இழிவும்
2. வங்கிக் கழிவு வீதத்தின் உயர்வும் இழிவும்
3. நேர்மாற்று மீள் கொள்வனவு வீதம் மற்றும் மீள் கொள்வனவு வீதம்
4. ஒரு ரூபாவிற்கான டொலர் பெறுமதியின் உயர்வும் மற்றும் இழிவும்
5. வங்கிகளுக்கிடையிலான அழைப்புப்பண வீதம் வங்கிக்கடன் வீதம் ஆகியவற்றுக்கிடையிலான வித்தியாசம் என்பதாகும்.

12. பின்வருவனவற்றில் ஒன்று சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கின் கூறல்லாதது

1. அலுவல்சார் நடைமுறை மாற்றல்கள் 2. தனியார் நடைமுறை மாற்றல்கள்
3. மூலதன மாற்றல்கள் 4. பண்டங்களின் ஏற்றுமதி
5. தேறிய வெளிநாட்டு காரணி வருமானம்

13. பின்வருவனவற்றுள் ஒன்று பணவீக்கத்தின் முக்கிய ஒரு விளைவாகும்.

1. அரச பாதீட்டின் பற்றாக்குறையில் அதிகரிப்பு 2. வேலையின்மையில் அதிகரிப்பு
3. அரச கடன்படுகையில் அதிகரிப்பு 4. பணத்தின் மெய்ப்பெறுமதியில் வீழ்ச்சி
5. வட்டி வீதத்தில் வீழ்ச்சி

14. ஒரு பொருளாதாரத்தில் தரப்பட்ட காலப்பகுதியில் கொடுக்கல் வாங்கல்களின் மொத்த பெறுமதி ரூபா 50 பில்லியனாகவும் பணநிரம்பலின் பெறுமதி ரூபா.20 பில்லியனுமாகும் எனக் கருதுக. பணச் சுற்றோட்டத்தின் பெறுமதி யாது?

1. 1000 2. 70 3. 30 4. 0.4 5. 2.5

15. இலங்கைக்கு சாதகமான வர்த்தக மாற்று வீதம் மாற்றம் அடைந்துள்ளதெனக் கருதும் போது,

1. இறக்குமதி அளவு அதிகரிப்பிலும் பார்க்க ஏற்றுமதி அளவு அதிகரிப்பு குறைவாக காணப்படும் போது
2. ஏற்றுமதி அளவு அதிகரிப்பிலும் பார்க்க இறக்குமதி அளவு அதிகரிப்பு குறைவாக இருக்கும் போது
3. ஏற்றுமதி விலை அதிகரிப்பிலும் பார்க்க இறக்குமதி விலை அதிகரிப்பானது குறைவாக காணப்படும் போது.
4. இறக்குமதி விலை அதிகரிப்பிலும் பார்க்க ஏற்றுமதி விலை அதிகரிப்பு குறைவாக காணப்படும் போது
5. ஏற்றுமதி அளவின் அதிகரிப்பானது இறக்குமதி அளவு அதிகரிப்பை ஒத்ததாக உள்ள போது

16. ஒப்பீட்டு அனுகூல கோட்பாடு கூறுவது, நாடுகள் வர்க்கத்தின் மூலம் நன்மையைப் பெறவேண்டுமாயின் நாடுகளுக்கிடையே பின்வரும் எது தொடர்பில் வேறுபாடு இருத்தல் வேண்டும்.

1. ஊழியச் செலவு 2. ஊழிய உற்பத்தித் திறன்
3. அமையச் செலவு 4. விலை 5. நாணய மாற்று வீதம்

17. பின்வருவனவற்றுள் எது ஊழிய உற்பத்தித்திறன் அதிகரிப்பின் ஊடாக அடைய முடியாது எனக் கருதப்படுகின்றது.

1. வருமான பங்கீட்டின் வேறுபாடுகளை நீக்குதல் 2. பொருளாதார வளர்ச்சி வீதத்தை அதிகரித்தல்
3. வெளிநாட்டு நேரடி முதலீடுகளை கவருதல் 4. செலவுகளை குறைத்தல்
5. பணவீக்கத்தை குறைத்தல்.

18. 2008 ஆம் ஆண்டு இலங்கையின் ஏற்றுமதிகளின் சேர்க்கைகளை சரியாக வெளிப்படுத்துவது எது?

| விவசாய ஏற்றுமதி | கைத்தொழில் ஏற்றுமதி | கனிப்பொருள் ஏற்றுமதி |
|---|---|---|
| 1. 22.8 | 75.7 | 1.5 |
| 2. 19.7 | 78.1 | 1.7 |
| 3. 70.1 | 28.6 | 1.3 |
| 4. 17.7 | 57.7 | 22.6 |
| 5. 20.2 | 67.2 | 10.8 |

19. இலங்கையின் ஏற்றுமதி திசைகள் குறைந்து செல்லும் வரிசையைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

1. மத்திய கிழக்கு, U.S.A, U.K, இந்தியா 2. இந்தியா, U.K , U.S.A மத்தியகிழக்கு
3. U.S.A, U.K, ஐரோப்பிய ஒன்றியம், மத்திய கிழக்கு
4. U.S.A, U.K, மத்திய கிழக்கு, ஐரோப்பிய ஒன்றியம்
5. U.K ,ஐரோப்பிய ஒன்றியம், மத்திய கிழக்கு, U.S.A


20. அண்மைக் காலங்களில் இலங்கையின் மெய் நாணயமாற்று வீதத் தாக்கமானது அதன் பெயரளவு தாக்கமுள்ள நாணயமாற்று வீதத்திலும் பார்க்க உயர்ந்த வீதத்தில் அதிகரித்துள்ளது. இந்த விளைவுக்கான காரணம்.

1. பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் முடிவுற்றமை.
2. பாதீட்டு பற்றாக்குறையில் அதிகரிப்பு.
3. அதிகரித்தல் வட்டி வீதங்கள்.
4. வெளிநாடுகளில் பணவீக்கத்திலும் பார்க்க உள்நாட்டில் உயர்ந்த பணவீக்கம்.
5. உயர்ந்த ஏற்றுமதி மற்றும் இறக்குமதி தொகை.

# களம் பல கண்ட யாழ் கோட்டை

18

## ஈழயுத்தம் – 2



05ஏப்பிரல் 1971.
நள்ளிரவு 11.30 மணி.

யாழ்ப்பாண நகரம் நல்ல உறக்கத்தின் தழுவலில் ஆழ்ந்திருந்த வேளையில். யாழ்ப்பாணம் கோட்டைப்பக்கம் இருந்து துப்பாக்கிகளிலிருந்து விடுபட்ட சன்னங்கள் வெடித்துச் சிதறுகின்ற சத்தம் எழுந்தது. அமைதியான யாழ்ப்பாணத்தின் மோனத் தூக்கத்தை அத் துப்பாக்கி வெடிச்சத்தம் சிதைத்தது. ஆங்கிலேயர் காலத்திற்குப் பின்னர் அப்படியான தொடர்ச்சியான துப்பாக்கி வெடிச்சத்தத்தை யாழ்ப்பாணம் கேட்டதில்லை. சுதந்திரமடைந்த பின்னர் அது தான் முதன் முதல் தொடர்ந்து கேட்ட துப்பாக்கிச் சத்தம். அது தான் முதன் முதல் யாழ்ப்பாணத்து மக்களின் நித்திரையைக் குழப்பிய தூப்பாக்கிச் சத்தம்.

ஆம், யாழ்ப்பாணக் கோட்டைச் சிறைச்சாலையில் சிறை பட்டிருக்கும் தங்கள் இயக்கத்தின் மாபெருந் தலைவன் றோகன விஜயவீரவை மீட்டுச் செல்வதற்காக தென்னிலங்கையிலிருந்து இங்கு வந்த ஜனதா எக்சத் பெரமுன என்ற ஜே.வி.பி இயக்கத்தினரின் மீட்புத் தாக்குதல் நடந்துகொண்டிருந்தது. யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தையும் யாழ்ப்பாணக் கோட்டைக்குள் புகுந்து சிறைச்சாலையையும் ஜே.வி.பி. இயக்கத்தினர் முற்றுகையிட்டுத் தாக்கினர்.

அக்காலத்தில் யாழ்ப்பாணம் கோட்டைக்குள் எந்நேரமும் சர்வசாதாரணமாக உட்சென்று வரலாம். மாலைவேளைகளில் நேரம் கிடைத்தால் கோட்டை உள் மைதானத்தில் விளையாடி விட்டும் வரலாம். ஆக சிறைச்சாலைப் பகுதியில் மட்டும் ஜெயிலர்கள் காவலிருப்பார்கள்.

இலங்கை சுதந்திரத்தின் பின் முதன் முதல் யாழ்ப்பாணக் கோட்டைத் தாக்குதல் நடந்தது. ஏன்? எதற்கு?

ஸ்ரீலங்காவில் முதலாளித்துவ ஆட்சியாளருக்கு எதிராக ஒரு பெரும் புரட்சியை ஏற்படுத்தி மக்களாட்சியை ஏற்படுத்தும் நோக்குடன் கெரில்லா யுத்தத்தை ஜாதிக எச்சத் பெரமுன இளைஞர்களை சேர்த்து நடாத்தியது. அதன் தலைவர் றோகன விஜயவீரவின் கோட்பாடு மிகத் தெளிவானது, இலகுவானது. "எந்த ஒரு புரட்சியும் பாட்டாளிகளினால் ஆயுதம் எடுக்காமல் வெற்றியடைந்ததில்லை. ஆயுதப் போராட்டத்தில் முதலாளித்துவ வர்க்கம் அதிகாரத்தைச் சமாதானமாகக் கையளித்ததுமில்லை. அரச யந்திரங்கள் தாக்கப்பட வேண்டும்."

1971 இல் நாடாளாவிய புரட்சியொன்றினை தோற்றுவிக்க றோகன விஜயவீர முயன்றார் .ஆனால் அதற்கு முன் 13 மார்ச் 1971 இல் அம்பாறையில் வைத்துப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். அவருடன் அவரியக்கத்தைச் சேர்ந்த லால் சோமஸ்ரீ, பிரேமரத்ன, நிசங்க விஜயரத்ன, ஹெலி சேனநாயக்க ஆகியோரும் கைதாகினர். அவர்கள் முதலில் மட்டக்களப்புச் சிறையில் வைக்கப்பட்டனர். பின்னர் கொழும்பு மகசின் சிறையிலும் கொழும்பு றிமான்ட் சிறையிலும் வைக்கப்பட்டனர். அங்கு இவர்களை வைத்திருப்பதில் பாதுகாப்புக் கஷ்டங்கள் இருப்பதை அறிந்து 14 மார்ச் இராணுவ வாகனங்களில் யாழ்ப்பாணக் கோட்டைச் சிறைச்சாலைக்கு இடம் மாற்றப்பட்டனர். அன்றே நாடு முழுவதும் அவசர காலநிலைமை பிரகடனப்படுத்தப்பட்டது. வெகு இரகசியமாக இது நடந்தாலும் சிறை இடமாற்றம் வெளியில் தெரிய வந்தது. 18 ஆம் திகதி றோகன விஜயவீரவின் தாயார் மகனைப் பார்த்துச்செல்ல யாழ்ப்பாணக் கோட்டைச் சிறைக்கு வந்தார். 20 ஆம் திகதி எஸ்.டி.பண்டாரநாயக்காவும் மாத்தயாவும் (இது வேறு மாத்தயா இவரின் பெயர் உயன்கொட) காரில் யாழ்ப்பாணம் வந்தனர். அவர்களால் கோட்டை சிறையில் இருந்த விஜயவீரவைப் பார்க்க முடியவில்லை. அனுமதி கிடைக்கவில்லை. எஸ்.டி.பண்டாரநாயக்க ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஆரம்ப கால அங்கத்தவராக இருந்தவர். கம்பகா பாராளுமன்றப் பிரதிநிதியாகவும் விளங்கியவர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து நீக்கப்பட்டதும் பீக்கிங் கம்யூனிசக்கட்சி அங்கத்தவரானார். பின்னர் ஜே.வி.பி ஆதரவாளரானார்.



ஏப்ரல் கிளர்ச்சிக்கு 36 நாட்களுக்கு முன்னர் 1971 பெப்ரவரி 27ஆம் திகதி ஹைட்பாக் திடலில் நடைபெற்ற கூட்டத்தில் ரோஹண விஜேவீர உரையாற்றும் காட்சி.

21 மார்ச் 1971 யாழ்ப்பாணக் கோட்டைச் சிறைச்சாலையிலிருந்து விஜயவீரவும் அவருடன் லால் சோம ஸ்ரீ, பிரேமரத்ன ஆகியோரும் கல்முனை நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். நீதிமன்றத்து அடைப்புக் கூட்டினுள் இருக்கும்போது விஜயவீர மற்றைய இருவருக்கும் தெளிவாக ஒரு தாக்குதலிற்கான விளக்கத்தைக் கொடுத்தார். என்னைச் சிறையிலிருந்து விடுவிப்பதற்கு 500 ஜே.வி.பி போராளிகள் யாழ்ப்பாணம் வர வேண்டும். சிறையைத் திட்டமிட்டு உடைத்து என்னை உடன் விடுவிக்கவேண்டும். அவ்வாறு வருபவர்களுடன் லால் சோமஸ்ரீ அல்லது பிரேமரத்ன கூட வந்து நான் இருக்கும் சிறை அறையைக் காட்ட வேண்டும். இதனை இன்று ஜே.வி.பி.யின் அடுத்த தலைவர்களான சனத் என்பவரிடம் அல்லது பியதிலகவிடம் கூறுக என விஜயவீர தகவல் அனுப்பினார். கல்முனை நீதிமன்றத்தில் சோமஸ்ரீயும் பிரேமரத்னவும் எதிர்பார்த்தது மாதிரி விடுதலையாகினர். விஜயவீர மீண்டும் கோட்டைச்சிறைக்குக் கொண்டு வரப்பட்டார்.

விஜயவீரவின் தகவல் உரியவர்களிடம் சேர்க்கப்பட்டது. திட்டம் வகுக்கப்பட்டது. யாழ்ப்பாணத்திற்குச் சிலர் அனுப்பப்பட்டனர்.

**செங்கை ஆழியான்**

28 ஆம் திகதி எஸ்.டி.பண்டாரநாயக்க கொழும்பிலிருந்து தொலைபேசி மூலம் யாழ்ப்பாணத்திலிருக்கும் தன் நண்பர் பாஸ்கரன் என்பவரை அழைத்தார். காலை யாழ் தேவியில் யாழ்ப்பாணம் வருவதாகவும் புகையிரத நிலையத்தில் சந்திக்குமாறும் தகவல் கொடுத்தார். பாஸ்கரன் அவரை யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்தில் சந்தித்தார். பண்டாரநாயக்கவுடன் மஞ்சு என்பவரும் வந்திருந்தார். பாஸ்கரனின் காரில் ஏறி அவரின் வீடு சென்றனர். சுன்னாகத்தைச் சேர்ந்த நாகரத்தினம் என்பவரையும் சந்தித்தனர். மறுநாள் யாழ்ப்பாணக் கோட்டைச் சிறைச்சாலைக்குச் சென்று விஜயவீரவைச் சந்திக்க முயன்றனர். அனுமதி வழங்கப்படவில்லை. (தொடரும்)

---

சட்டவிரோத கடவுச்சீட்டை பயன்படுத்தி

## கட்டாரில் இருந்து இத்தாலி செல்ல முயற்சித்த இலங்கையர் கைது

(கொழும்பு)

12 இலட்சம் ரூபாய் செலவிட்டு, சட்டவிரோதாமக தயாரிக்கப்பட்ட போலி கடவுச்சீட்டைப் பயன்படுத்தி, கட்டாரில் இருந்து இத்தாலி செல்ல முயற்சித்த இலங்கையர் ஒருவர் அங்கு கைதுசெய்யப்பட்டு, நாடு கடத்தப்பட்டுள்ளார்.

இலங்கை அனுபப்பட்ட நிலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபரை ரூபா ஒரு இலட்சத்து 30 ஆயிரம் ரொக்கப் பிணை மற்றும் சரீரப் பிணையில் விடுதலைசெய்யுமாறு நீர்கொழும்பு பிரதான நீதவான் ஜானகி டி அல்விஸ் உத்தரவிட்டார்.

என்.பீ.எம். இர்ஷான் என்பவரே இவ்வாறு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தார். (6)

## மன்.அடம்பன் வைத்தியசாலை திறந்து வைக்கப்படவுள்ளது

(கொழும்பு)

மன்னார் அடம்பன் வைத்தியசாலை இன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

மாந்தை மேற்கு அடம்பன் பிரதேசத்தில் அமைந்துள்ள இந்த வைத்தியசாலையை வடமாகாண ஆளுநர் மேஜர்.ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி திறந்து வைக்கவுள்ளார்.

யுத்தத்தின் போது சேதமடைந்திருந்த அடம்பன் வைத்தியசாலை இராணுவத்தினரின் உதவியுடன் புனரமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

---

## தன்னிறைவான நாடாக மாற்றியமைப்பதே அரசாங்கத்தின் பிரதான நோக்கமாகும்

பிரதமர் தெரிவிப்பு


(கொழும்பு)

இலங்கையை தன்னிறைவான நாடாக மாற்றியமைப்பதே அரசாங்கத்தின் பிரதான நோக்கமாகும் என பிரதமர் டி.எம்.ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

இன்னும் நான்கு ஆண்டுகளில் உலகிற்கு ஓர் முன்னுதாரணமாக இலங்கை திகழும் எனவும் நாட்டை அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச் செல்லும்முயற்சிகளுக்கு சகல இன சமூகங்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய பிரதமர் டி.எம்.ஜயரட்னவிற்கு வரவேற்பு அளிக்கும் விசேட நிகழ்வொன்று நேற்று முன்தினம் கம்பளையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

போட்டிகள் நிறைவடைந்துள்ளதாகவும் ஜனாதிபதியின் தலைமையின் கீழ் அனைவரும் அணி திரள வேண்டிய ஓர் அவசியம் எழுந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



நாட்டில் உள்ள சகல விவசாய நிலங்களிலும் விவசாயம் செய்யப்பட்டால் தன்னிறைவான நாடாக இலங்கையை மாற்றியமைக்க முடியும் எனவும் வெளிநாடுகளு க்கு அரிசியை ஏற்று மதி செய்ய முடியும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

எமது கலாசார விழுமியங்கள் மீள்வும் நிலை நாட்டப்பட வேண்டியது மிகவும் இன்றியமையாததென குறிப்பிட்ட அவர் பிள்ளைகள் பெற்றோரை கொலை செய்தல், பெற்றோர் பிள்ளைகளை கொலை செய்தல் போன்ற சமூக சீரழிவுகள் அண்மைக் காலமாக. இடம்பெற்று வருவதாக தெரிவித்துள்ளார்.

பிரதமர் என்று தம்மை அழைப்பதனை விடவும் டி.எம்.ஜயரட்ன என தம்மை மக்கள் அழைப்பதனையே தாம் விரும்புவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (6)

# நூறாவது ஆண்டில் காலடி பதிக்கும் யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி


கல்லூரியின் முகப்புத் தோற்றம்

## நூற்றாண்டு விழா மண்டபத்தின் அடிக்கல் நாட்டு விழா இன்று

1911 ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் மூன்றாம் நாள் இக் கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டது. 2011 ஆம் ஆண்டு சித்திரை மாதம் நூற்றாண்டு விழாவினை இக் கல்லூரி சிறப்பாகக் கொண்டாட இருக்கின்றது.

யா/உரும்பிராய் இந்துக் கல்லூரியை ஸ்தாபிப்பதற்கு அமரர் சின்னத்தம்பர் வேலுப்பிள்ளை என்பவர் நிலத்தினை வழங்கி உதவினார்.

இக் கல்லூரியை ஸ்தாபித்தவர் வைத்திய கலாநிதி பு.வல்லிபுரம் என்பவர். இவர் சுருட்டுத் தொழிலில் ஈடுபட்ட சிறுவர்களில் பத்துப் பேரை அவர்களின் பெற்றோர்களுடன் அன்பாக உரையாடி 'நாங்கள் ஒரு சைவ ஆங்கிலப் பாடசாலையைத் தொடங்கவுள்ளோம். அதில் உங்களது பிள்ளைகளையும் படிக்க விடுங்கள்' என்று கூறி அவர்களுடன் உறவாடி இந்தப் பாடசாலையைப் பத்துப் பிள்ளைகளுடன் ஆரம்பித்தார்.

சில காலம் செயற்பட்ட இக் கல்லூரி 'இந்துக் கல்லூரி அதிகார சபையினரின்' பரிபாலனத்திற்குக் கீழ் கையளிக்கப்பட்டது. அவர்கள் கிடுகினால் வேயப்பட்ட ஒரு மண்டபத்தினை அமைத்துக் கூடுதலான பிள்ளைகளைச் சேர்த்து சின்னையா வாத்தியாரின் தலைமையில் நடத்தி வந்தனர். அவர் விலகிச் செல்ல வியாகேசர் தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டார்.

1915 ஆம் ஆண்டு இங்கு ஒரு 'தமிழ்ப் பிரிவு' ஆரம்பிக்கப்பட்டது. இதற்குத் தலைமை ஆசிரியராக இருந்தவர் நீர்வேலியைச் சேர்ந்த பண்டிதர் வேலுப்பிள்ளை ஆவார். இத் தமிழ்ப் பிரிவில் அரிவரி தொடக்கம் மூன்றாம் வகுப்புக்கள் வரை இருந்தன.

மாணவர்கள் மூன்றாம் வகுப்பில் சித்தியடைந்த பின்னரே ஆங்கிலப் பாடசாலையில் சேர்க்கும் திட்டம் நடைமுறைக்கு வந்தது. அவ்வாறு சேரும் பிள்ளைகள் ஆங்கிலம் முதலாம் ஆண்டில் சேர்க்கப்படுவர். ஆங்கிலம் இரண்டாம் ஆண்டில் சித்தியடைந்த பின்னர் ஐந்தாம் ஆண்டில் சேர்க்கப்படுவர்.

1920ல் வியாகேசர் யா/இந்துக் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுச் செல்ல, சாவகச்சேரியைச் சேர்ந்தவரும், பயிற்றப்பட்ட ஆங்கில தராதரத்தைப் பெற்றவருமான குமாரசுவாமி இக் கல்லூரியின் தலைமை ஆசிரியரானார்.

இவர் குதிரையிலே பாடசாலைக்கு வரும் பழக்கமுடையவர். இவருடைய காலத்தில் வகுப்புக்களை அதிகரிக்கக் கட்டடங்கள் தேவையாக இருந்தன. இதனால் மலாயன் உரும்பிராய் சங்கத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தி கட்டடங்கள் அமைக்கப்பட்டன.

1923 ஆம் ஆண்டளவில் குமாரசுவாமி அவர்கள் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு இடம் மாறிச் செல்ல அவ்விடத்திற்கு பி.தம்பு அவர்கள் நியமிக்கப்பட்டார். ஆரம்பத்தில் மாட்டுவண்டியில் பாடசாலைக்கு வருகை தந்த அவர் பின்னர் துவிச்சக்கர வண்டியில் வரும் பழக்கமுள்ளவரானார்.

இவர் மிகுந்த கண்டிப்பானவர். 1926 ஆம் ஆண்டளவில் சீதாராமன் அவர்கள் இவரது சிரேஷ்ட உதவியாசிரியரானார். தம்பு அவர்கள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு இடம்மாறிச் செல்ல சீதாராமன் உரும்பிராய் இந்துக் கல்லூரியின் தலைமை ஆசிரியரானார்.

இவர் இந்தியாவிலுள்ள பண்டிக் கொடு முடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். சீதாராமன் அவ்வூரிலேயே வாடகைக்கு வீடெடுத்துக் குடும்பமாக வாழ்ந்து வந்தார். இவர் ஒரு திறமையான நிர்வாகி.

இதனால் இப் பாடசாலை கல்வியில் முன்னேற்றம் கண்டது. அத்துடன் இவர் ஆங்கிலப் பாடத்தையும் சிறப்பாகக் கற்பித்து வந்தார். 1932 ஆம் ஆண்டளவில் இங்கு 'கனிஷ்ட தராதர பத்திர வகுப்பு' (JSC) ஆரம்பிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து 'உரும்பிராய் இந்து ஆங்கிலப் பாடசாலை' என்ற பெயருடன் இருந்த இவ் வித்தியாசாலை 'உரும்பிராய் இந்துக் கல்லூரி' என பெயர் மாற்றம் பெற்றது. JSC வகுப்பில் சித்தியெய்திய மாணவர்கள் அரசாங்கத்திலும், வேறு நிறுவனங்களிலும் வேலை வாய்ப்புப் பெறும் தகுதியுடையவர்களாயினர்.

1935 ஆம் ஆண்டு சீதாராமன் அவர்கள் காரைநகர் இந்துக் கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். அவரது இடத்திற்குக் கந்தர்மடத்தைச் சேர்ந்த ஆங்கிலப் பயிற்சித் தரா தரம் பெற்ற இராசரத்தினம் தலைமை ஆசிரியரானார்.

இரண்டு வருடங்களின் பின் அவர் விலக, BA பட்டதாரியான கனகசபை தலைமை ஆசிரியரானார். இவர் ஓராண்டு காலம் கடமையாற்றி ஓய்வு பெற, சீதாராமன் மீண்டும் இக் கல்லூரியின் தலைமை ஆசிரியரானார்.

1941 இல் 'C' தரக் கல்லூரியாக விளங்கிய இக் கல்லூரி 'B' தரத்துக்கு உயர்த்தப்பட்டு அபிவிருத்திகளும் மேற்கொள்ளப்பட்டன. இக் காலத்தில் சிரேஷ்ட தராதரப் பத்திர வகுப்பு (SSC) இங்கு ஆரம்பிக்கப்பட்டது.

ஆங்கிலம் கற்பிப்பதில் விற்பன்னரான தனது மகன் ஸ்ரீனிவாசன் CMA பட்டதாரியை சீதாராமன் ஆங்கிலம் போதிப்பதற்காக இங்கு சேர்த்துக் கொண்டார். ஸ்ரீனிவாசன் இதற்கு முன் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் அதிபராக இருந்தவர்.

1941 இல் உதைபந்தாட்டம் இக் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டது. 1957 இல் சீதாராமன் ஓய்வு பெற ஸ்ரீனிவாசன் அதிபரானார். இவரே விளையாட்டுத் துறைக்கும் பொறுப்பாக இருந்து அதனை வளர்த்து வந்தார்.

1915 ஆம் ஆண்டிலிருந்து இங்கு இயங்கி வந்த 'தமிழ்ப் பிரிவு' 1950 இல் கற்பகப் பிள்ளையார் ஆலயத்திற்கு மேற்கேயுள்ள கோவிலுக்குச் சொந்தமான காணிக்கு இடம்மாறியது. இதுவே இன்று உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயமாக விளங்குகின்றது.

1957 இல் ஸ்ரீனிவாசன் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுச் செல்ல, எம்.இளையதம்பி அவர்கள் அதிபரானார். அவ்வாண்டு இறுதியில் இளையதம்பி இடமாற்றம் பெற்று காரைநகர் இந்துக் கல்லூரிக்குச் செல்ல, அவரிடத்திற்கு 1958 இல் ஏ.வைத்திலிங்கம் நியமிக்கப்பட்டார்.

இவர் BA,BSC பட்டதாரி மட்டுமல்ல, ஒரு கணித மேதை என்றே குறிப்பிடலாம். சிறந்த கல்விமான், உயர்ந்த பண்பாளன் இவரது பன்னிரண்டு வருடச் சேவைக் காலம் இக் கல்லூரியின் 'பொற்காலம்' என்றே குறிப்பிடலாம்.

B தரத்தோடு இயங்கிய இக் கல்லூரி A தரத்திற்கு உயர்த்தப்பட்டது .இவரது காலத்தில் பல கட்டடப் பணிகளும் நிறைவேறின. சிறப்பாக 'மலாய உரும்பிராய் சங்க மண்டபம், பொன் விழா மண்டபம்' என்பன கட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

1971 இல் ஏ.வைத்திலிங்கம் அவர்கள் ஓய்வு பெற 1972 இல் சச்சிதானந்தம் (BA,Dip.in. Education) பட்டதாரி அதிபரானார். இவரது காலத்தில் மேலும் கட்டட வசதிகள் தேவைப்பட வித்தியா பகுதியினருடன் தொடர்பு கொண்டு ஐந்து வகுப்பறைகள் கொண்ட ஓட்டினால் வேயப்பட்ட கட்டடத்தை அமைத்தார்.

1974 இல் சச்சிதானந்தம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுச் செல்ல அவ் வெற்றிடத்திற்கு உப அதிபராக இருந்த சுவாமிநாத சர்மா அதிபரானார். மிகக் குறுகிய காலமே பதவி வகித்தார்.

இவர் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட, தியாகராஜா இங்கு அதிபரானார். சிறந்த விஞ்ஞான ஆசிரியராகக் கணிக்கப்பட்ட இவர், இங்கு அதிபராக ஓராண்டு காலம் செயற்பட்டு ஓய்வு பெற்றார்.

அவரது இடத்திற்கு புதிய அதிபரை நியமிக்கக் காலதாமதம் ஏற்பட்டது. இதனால் உப அதிபராக இருந்த எஸ்.சிவன்பாலன் அவர்கள் அதிபர் பொறுப்பை ஏற்று நிர்வகித்தார்.

பின்னர் திரு.சி.கனகலிங்கம் அவர்கள் அதிபராக நியமிக்கப்பட்டார். இவரது காலத்திலும் மேற்குப் பகுதிக் கட்டடங்கள் நிறைவு செய்யப்பட்டன. 1976 இல் கனகலிங்கம் இக் கல்லூரியை விட்டு விலகி பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் உப அதிபர் பொறுப்பை ஏற்றார். இதன் பின்னரும் ஒருமுறை எஸ்.சிவன்பாலன் அதிபர் பொறுப்பை ஏற்றார்.

இவர் காலத்தில் முன் தொடங்கப்பட்ட மேல் மாடிக் கட்டடத்தின் மேற்குப்பகுதி பூர்த்தியாக்கப்பட்டது. 1978 இல் இ.சிவானந்தன் அதிபரானார். இவரும் ஒரு சிறந்த நிர்வாகியாவார். இவர் கல்லூரியின் கல்வி வளர்ச்சியில் மிகுந்த அக்கறை காட்டினார்.


நூற்றாண்டு விழா மண்டபமாக அமையவுள்ள பழைய கட்டடம்

இவரது காலத்திலும் 'இசை விழாக்கள்' போன்ற நிகழ்வுகள் மூலம் நிதி சேர்க்கப்பட்டு கட்டட வேலைகள் நிறைவேற்றப்பட்டன. சிவானந்தம் அவர்கள் 'வித்தியாதரிசியாக' பெற்றுச் செல்ல அவருக்குப் பின்னிருந்த எஸ். சிவன்பாலன் அதிபரானார்.

இவரது காலத்தில்தான் அதாவது 1986 இல் இக் கல்லூரியின் 'பவள விழா' சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

1987 இல் போர்ச் சூழலலினால் இப் கல்லூரி மிகவும் பாதிக்கப்பட்டது. எஸ்.சிவன்பாலனின் காலத்திலேயே ஒரு நவீனமான இரசாயன ஆய்வுகூடம் அமைக்கப்பட்டது. இவர் இளைப்பாறிச் செல்ல இவரது இடத்திற்கு எமது கல்லூரியின் பழைய மாணவனான சி.பாலசுப்பிரமணியம் அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்றார். அக் காலத்தில் கொத்தணி அதிபர்களுக்கான பணிகளையும் ஆற்றி வந்தார்.

1995 இல் ஏற்பட்ட குடாநாட்டு இடம்பெயர்வினால் இப் பாடசாலையும் சாவகச்சேரிக்கு இடம்பெயர்ந்து சென்றது. இவ்விடப் பெயர்வினால் பாடசாலைக் கட்டடங்களும் சொத்துக்களும் பாரிய சேதங்களுக்குள்ளானது.

மீண்டும் 1996.05.06 ஆம் திகதி இப் பாடசாலை தனது சொந்த ஊருக்குத் திரும்பியது. அவ்வேளை அதிபர் வருகை தராத காரணத்தினால் உப அதிபராகக் கடமையாற்றிய மா.சண்முகரத்தினம் அவர்கள் அதிபருக்கான கடமைகளைப் பொறுப்பேற்று நடத்தி வந்தார்.

1999.02.19 இல் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றிய அ.ஈஸ்வரநாதன் அவர்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு அதிபராக நியமிக்கப்பட்டார். இவரது காலத்தில் பாடசாலை இழந்தவற்றைப் பெற்றுப் புதுப்பொலிவு பெறத் தொடங்கியது.

அந்த வகையில் GTZ நிறுவனத்தின் உதவி மூலம் ஆசிரியர் மாணவர்களுக்கான ஆண், பெண் மலசலகூடத் தொகுதிகள் அமைக்கப்பட்டன. அத்துடன் 97X25 அடி கொண்ட மாடிக் கட்டடத் தொகுதியும் புனரமைப்புச் செய்யப்பட்டது.

இதேபோல் 120X20 அடி கொண்ட வகுப்பறைத் தொகுதியும் புனரமைக்கப்பட்டது. ரூபாய் மூன்று லட்சத்து எண்பத்தையாயிரத்து தொளாயிரத்து ஐம்பது (38,5950/=)ற்குப் பாடசாலைக்குத் தேவையான தளபாடங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

இவற்றைத் தொடர்ந்து 80X20 அடி கொண்ட அழகியற் பாடக் கட்டடத் தொகுதியும் அமைக்கப்பட்டது. விவசாய விஞ்ஞான ஆய்வு கூடமும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் கணனி அறைகளும் ஓடியோ, வீடியோ அறைகளும் அமைக்கப்பட்டன. முன்னாள் அதிபர் ஸ்ரீனிவாசன் கலையரங்கமும் இவரது காலத்தில் புனரமைக்கப்பட்டது.

கல்விச் செயற்பாட்டிலும், இணைப்பாட விதானச் செயற்பாட்டிலும் அபிவிருத்தி கண்டு வரும் எமது கல்லூரி 2009 ஆம் ஆண்டு க.பொ.

### கல்லூரிச் சமூகம்

த.(சா/த) பரீட்சையில் எந்தவொரு பாடமும் சித்தியடையாத மாணவர்கள் எவரும் இல்லாத நிலையை உருவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இவ்வாறான அபிவிருத்திப் பாதையில் இக் கல்லூரியின் பழைய மாணவனான கந்தசாமி தர்மகுலசிங்கம் (லண்டன்) அவர்கள் 120X46 அடி கொண்ட கலையரங்கத்தினையும், வகுப்பறைக் கட்டடத்தினையும் நூற்றாண்டு விழா ஞாபகார்த்த மண்டபமாக அமைத்துத்தருவதற்கு முன்வந்துள்ளார்.

இதற்கான அடிக்கல்லை நாட்டுவதற்கு இன்று 29.04.2010 திருவருள் கிடைத்துள்ளமையையிட்டு இக் கல்லூரிச் சமூகம் பெருமகிழ்வடைகின்றது.

நூற்றாண்டு விழா மண்டபமும், கல்லூரியின் நூற்றாண்டு விழாவும் ஒருங்கே சிறப்பாக நடைபெற இறைவனைப் பிரார்த்திப்போமாக. ❖

1) புகைத்தல்

- ஒரு நாளைக்கு புகைக்கும் சிகரெட்டுக்களின் எண்ணிக்கை.

- புகைப்பிடிக்கும் வருடங்களின் எண்ணிக்கை.

2) நோய் எதிர்ப்புச் சக்தி குறைவு

3) எயிட்ஸ் நோயாளிகள்

4) உறுப்பு மாற்றுச் சிகிச்சை செய்தவர்கள்

5) விற்றமின் ஏ குறைபாடு

6) அதிக எண்ணிக்கையான குழந்தைப் பேறு.

**புற்றுநோய் ஏற்படும் அபாயத்தை குறைப்பதற்கான சில உணவுப்பழக்க வழக்கங்கள்**

◆ ஒவ்வொரு சாப்பாட்டு வேளைகளிலும் வேறுபட்ட வகையான புதிய மரக்கறிகளையும், பழங்களையும் அதிகளவில் சேர்த்தல்

◆ தானியங்களில் அதிகளவு நார்ச்சத்து இருப்பதால் அதனை இயன்றளவில் சாப்பாட்டில் சேர்த்தல்.

◆ உணவின் சிலகூறுகளி லேயே நேரடியாகக் காணப்படு கிறது.

- அதிக அளவிலான கொழுப்பு

- மிகையான புரதம்

- கூடுதலான இனிப்பு

◆ புறச்சூழலில் இருந்து உணவில் சேருதல்

- விவசாய இரசாயனங்கள்

- உறைப்பான உணவுகள்

கணிசமான, கட்டுப்பாடற்ற பாவனையால் - புற்றுநோய் உருவாக்கத்தில் அதிகளவு பங்களிப்புச் செய்வதாகக் கருதப்படும் பிரதான உணவுகள்

1) வெதும்பிய, வாட்டிய செந்நிற இறைச்சி

2) பொரியல் வகைகள்

3) பாற் பண்டங்கள்


4) சீனி தூவிய, உப்புச் சேர்த்த கொறிக்கும் உணவுகள்

5) மதுபானக் குடிவகைகள்

3

6) வர்த்தக ரீதியிலான

# புற்றுநோய் ஓர் அறிமுகம்



Stage I



Stage II

**கருப்பைக் கழுத்து புற்று நோய்க்கான அறிகுறிகள்**

◆ மாதவிடாய் நின்ற பின்னர் ஏற்படும் இரத்தப் போக்கு

◆ மாதவிடாய்க்கிடையான இரத்தப்போக்கு

◆ உடலுறவின் பின்னான இரத்தப்போக்கு

◆ அதிகளவான துர்நாற்றத்துடன் கூடிய வெள்ளை படுதல்

**நோய் முற்றிய நிலையில்**

◆ கால்வீக்கம்

◆ கால், இடுப்புவலி

◆ சிறுநீருடனான இரத்தப்போக்கு

◆ மலத்துடனான இரத்தப்போக்கு

◆ வயிற்றோட்டம்

**புற்றுநோயும் உணவுப் பழக்க வழக்கமும்**

உணவானது சில புற்றுநோய்கள் ஏற்படுவதற்கு காரணமாக இருக்கிறது. சில உணவுகள் புற்றுநோய் ஏற்படும் அபாயத்தை குறைப்பனவாகவோ அல்லது தடுப்பனவாகவோ உள்ளன.

பொதுவாக விலங்குணவுகள் புற்றுநோய் அபாயத்தை கூட்டுவனவாகவும் மரக்கறிகள், பழங்கள் புற்றுநோய் அபாயத்தை குறைப்பனவாகவும் உள்ளன.

◆ பழச்சாறுகள் உட்கொள்ளும் போது இயன்றளவில் 100 வீதமாக சாறாகவே உட்கொள்ளல்.

◆ இரசாயனப் பதார்த்தங்கள் விசிறப்பட்ட மரக்கறிகள், பச்சை இலைகள் மற்றும் நிறப் பழவகை களை நீரில் நன்றாக அலசிக் கழுவியபின் பயன்படுத்தல்.

◆ சமையலறையில் பொரித்தலுக் காக முதல் நாள் பாவித்த எண்ணெயினை அடுத்தநாள் பாவித் தலைத் தவிர்த்தல்.

◆ உணவின் மூலம் பெறும் சக்தியின் அளவின் 10 வீதத்திலும் குறைவான அளவு மட்டும் கொழுப்புணவு மூலம் பெறல்.

◆ விலங்குணவு வகைகளைத் தவிர்த்தல்.

◆ பதனிடப்பட்ட உணவுகளை குறைந்தளவில் பயன்படுத்தல்.

◆ பொரிக்கப்பட்ட மரக்கறி வகைகளை இயன்றளவில் குறைத்தல்.

◆ சிறிய வகை மீன்களை உணவில் இயன்றளவு சேர்த்தல்.

◆ பூஞ்சணம் பிடித்த உணவுகளை (ஒடியல், பழுதடைந்த தயிர்) தவிர்த்தல்.

◆ மிகச்சூடான உணவுகள், பானங்கள் என்பன உள்ளெடுத் தலை தவிர்த்தல்.

**புற்றுநோயும் உணவின் பங்களிப்பும்**

புற்றுநோய் உருவாக்கத்தில் உணவின் பங்களிப்பு 35 வீதம் ஆகும்.

***உணவும் புற்றுநோயும்***

1) புற்றுநோயை ஏற்படுத்தும் காரணிகள்

- நாட்பட்ட, பழுதடைந்த உணவுகள்

- உணவில் சேர்க்கப்படும் மேலதிக பதார்த்தங்கள்

- உணவு தயாரிப்பின் போது சம்பவிக்கும் தீய விளைவுகள்

- பதனிடப்பட்ட உணவுகள்

◆ உணவின் சில கூறுகளில் இருந்து உடல் அனுசேபத் தாக்கங்களால் உருவாகல்.

2. புற்றுநோயை குறைக்கும் காரணிகள் குறைவாயிருத்தல்

◆ நார்ப்பொருட்கள்


**உணவுப் பதார்த்தங்களும் பாதிக்கப்படும் உடற்பகுதிகளும்**

◆ புகையிலை - நுரையீரல், களம், சிறுநீரகம், சிறுநீர்ப்பை, கருப்பைக்கழுத்து.

◆ மதுபானம் - வாய்க்குழி, தொண்டை, களம், ஈரல்

◆ அதிக கொழுப்புள்ள இறைச்சி (மாடு, பன்றி) - குடல், மார்பகம், முன்னிலைச்சுரப்பி (Prostate Gland).

◆ சூடான, காரமான உணவுகள் - வாய்க்குழி, தொண்டை களம்.




◆ அதிகளவான உப்பு - இரைப்பை

◆ மிகை நிரப்பு பதார்த்தங்கள் - வாய்க்குழி, இரைப்பை, சிறுநீர்ப்பை

வெண்ணெய் தயாரிப்புக்கள்

7) ஊறுகாய் வகைகள்

8) கோப்பி

9) பதனிடப்பட்ட இறைச்சியிலான தின்பண்டங்கள்

10) ஆம்லட் பிஸா

**விவசாய இரசாயனங்களும் புற்று நோயும்**

◆ பீடை கொல்லிகள் மிகையான பாவனை

◆ கட்டுப்பாடற்ற பசளை உபயோகம்

◆ நிலக்கீழ் நீரில் இரசாயனங்களின் செறிவு அதிகரித்தல்

◆ தோற்றப் பொலிவிற்காக பச்சை இலை வகைகள், பழங்கள் மீது இரசாயனம் விசிறுதல்

◆ பழங்கள், காய்கறிகளை நன்கு கழுவாது உட்கொள்ளல்

விவசாய இரசாயன்ங்களின் மீதிகள் உணவுப் பொருட்களில் அனுமதிக்கப்பட்ட அளவுக்குள் உள்ளனவா என அளவிடப் படாமை

◆ கடுமையான சட்டங்கள் பிரயோகப் படாமை.

சீரான வாழ்க்கை முறையும் முன்னேற்றகரமான நடத்தையியல் மாற்றங்களும் புற்றுநோய் தோன்றுவதைத் தடுப்பதில் அதிக செல்வாக்குச் செலுத்துகின்றன.

புற்றுநோய் சிகிச்சைப்பிரிவு,
யாழ். போதனா வைத்தியசாலை.

◆ உடற்பருமனைக் கட்டுப்பாடாகப் பேணல்

◆ அளவான - ஆரோக்கியமான உணவுகளை உட்கொள்ளல்

◆ வெற்றிலை, புகையிலை உபயோகித் தலை தவிர்த்தல்


◆ புகைத்தலை நிறுத்தல், மதுபாவனையிலிருந்து படிப்படியாக விடுபடுதல்

◆ நாளாந்த செயற்பாடுகளிலேயே உடலை கட்டுக்கோப்பாகப் பேணவல்ல பயிற்சிகளை மேற்கொள்ளல்.

◆ உடலையும் உள்ளத்தையும் ஆரோக்கியமாக வைத்திருத்தல். (முற்றும்)

## ஊடகவியலாளர்களுக்காக சகல வசதிகளையும் கொண்ட ஊடகக் கிராமம்

### அமைச்சர் மேர்வின் சில்வா



(கொழும்பு) ஊடகவியலாளர்களுக்காக சகல வசதிகளையும் கொண்ட ஊடகக் கிராமம் ஒன்றை அமைப்பதே தனது நீண்டகால கனவு என ஊடகத்துறை பிரதியமைச்சர் கலாநிதி மேர்வின் சில்வா தெரிவித்தார்.

லேக் ஹவுஸ் நிறுவனத்திற்கு நேற்று முன்தினம் வருகை தந்த அமைச்சர் தொழிற் சங்க பிரதிநிதிகளைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

சந்தர்ப்பவாதம், அதிகார ஆசை, பழி வாங்குதல், கோபம் என்பவற்றை புறந்தள்ளி தமது பேனாவைப் பயன்படுத்த வேண்டியது சகல ஊடகவியலாளர்களின் பொறுப்பாகும். இதன்மூலமே உண்மையான ஊடகத்துறையைக் கட்டியெழுப்ப முடியும். ஊடகவியலாளர்களின் குடும்பப் பின்னணி, சமூக அந்தஸ்து என்பவற்றை மேம்படுத்துவதன் மூலமே சிறந்த ஊடகத் துறையைக் கட்டியெழுப்ப முடியும்.

குடும்பப் பிரச்சினை மனதில் இருக்கையில் தனது கருத்தை தெளிவாகவும் சுதந்திரமாகவும் சமூகத்துக்கு முன்வைக்க முடியாது. அதனால் அனைத்துக்கும் முன்பாக ஊடகவியலாளர்களின் சமூக அந்தஸ்தை உயர்த்தி பொருளாதார ரீதியில் அவர்களை பலப்படுத்த வேண்டியது மிக முக்கியமாகும் என்றார். (6)

## எதிர்க்கட்சித் தலைவர் பொறுப்புடனும் ஒழுக்கத்துடனும் செயற்பட வேண்டும்

### தேசிய சட்டத்தரணிகள் சங்க தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி வீழ்ந்துள்ள துரதிர்ஷ்டமான நிலைமையில் இருந்து கட்சியை மீட்டெடுக்க கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, மிகவும் பொறுப்புடனும் ஒழுக்கத்துடனும் செயற்படவேண்டும் என தேசிய சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி உபுல் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க, தேசிய சட்டத்தரணிகள் சங்கத்தை புறந்தள்ளி விட்டு, செயற்படுவதன் மூலம் கட்சி மேலும் அதள பாதாளத்திற்குள் விழும் நிலைமை ஏற்படும் எனவும் உபுல் ஜயசூரிய குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

சட்டத்தரணிகள் தேவையான சந்தர்ப்பத்தில் பயன்படுத்தப்பட்டு, ஏனைய சந்தர்ப்பங்களில் புறந்தள்ளப்படும் குழுவினர் அல்ல எனவும் தமது சங்கம் ஐக்கிய தேசியக் கட்சியின் நலனுக்கான பாரிய பணிகளை முன்னெடுத்திருந்ததாகவும் தமது சங்கத்தில் உள்ளவர்கள் கட்சியைச் சார்ந்து வாழ்பவர்கள் அல்ல எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் கட்சிக்காக பாரிய பொறுப்புக்களை நிறைவேற்றியுள்ள தமது சங்கத்தை புறந்தள்ளிவிட்டு, கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க செயற்படுவது மிகவும் துரதிர்ஷ்டமானது எனவும் சட்டத்தரணி உபுல் ஜயசூரிய மேலும் தெரிவித்துள்ளார். (6)

துஷ்டனையும் தங்கத்தையும் பேரிகையையும் முரட்டுக் குதிரையையும் நற் குண விருத்தி கருதி அடிக்கவேண்டும். ~ *மனு*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# சமூகச் சீரழிவில் தோற்றுவாய் பாரீர்

யுத்தம் முடிந்த கையோடு யாழ்.குடாநாட்டில் சமூகச் சீரழிவுகள் மேலெழுகை பெற்றுள்ளன. யுத்தத்திற்குப் பயந்த மக்கள் இப்போது சமூகச் சீரழிவுகளுக்கு அஞ்சும் அபாயம் வேகமெடுத்துள்ளமை வேதனைக்குரிய செய்தி.

தமிழர்கள் துன்பப்படும் தலைவிதிக்கு ஆட்பட்டவர்கள் என்பது போல நிலைமை நாளுக்கு நாள் மோசமடைகின்றது. கடத்தல், பாலியல் வல்லுறவு என்ற கொடூரங்கள் இத்துணை தூரம் மோசமடைவதற்குக் காரணம் என்ன என்பது குறித்து ஆராய்ந்தால்,

மூல காரணம் பெற்றோர்கள் என்பதே முடிபாகும். ஒவ்வொரு பெற்றோரும் தங்களின் பிள்ளைகளின் நடத்தைகள் பற்றி அறியாதவர்களாக இருப்பது மிகப் பெரும் குறைபாடாகும்.

இந்தக் குறைபாடு பின்தங்கிய-கலாசாரப் பிறழ்வுடைய, கசிப்பும், தூஷண வார்த்தை களும், ஒழுங்கற்ற நடத்தைகளும் உடைய சூழமைவில் மிக அதிகம் எனலாம்.

தனது பிள்ளை, தனது மனைவி, தனது குடும்பம் என்ற கரிசனை எதுவுமற்ற தந்தை ஒருவரால் தீய பழக்கத்தை உள்வாங்கக் கூடிய பிள்ளையை மட்டுமே உருவாக்க முடியுமேயன்றி, வேறு எதனைத்தான் செய்ய முடியும்?

இதேபோன்று கசிப்புக் காய்ச்சி அதனை ஊற்றி விற்கும் பெண் ஒருவரால் அந்தச் சமூகத்தை சீரழிக்க முடியுமேயன்றி ஒருபோதும் காப்பாற்ற முடியாது.

இந்த உக்கிரமான கொடுமைகள் எங்கள் யாழ்.குடாநாட்டில் ஊருக்கு ஊர், பிரதேசத்திற்குப் பிரதேசம் தாராளமாக உண்டு. இதை நாம் மறந்து சிந்திப்பது மடமைத்தனமாகும்.

கடத்தல், பாலியல் வல்லுறவு என்ற சமூகச் சீரழிவுக்கு சாதியம் என்ற கொடும்பேய் குழை அடித்து கலையாட வைக்கின்றது. இவர்களுக்கு நாம் எந்தப் புத்தியையும் சொல்ல முடியாதென்ற அறிவியல் கூட்டம் ஒருபுறம், உவர்களுக்கு என்ன தெரியும்? இவர்கள் யார் எங்களுக்குச் சொல்வது? என்ற அறியாமையின் ஆணவச் செருக்கு மறுபுறம்.

இதற்கிடையே போதையேற்றும் கையடக்கத் தொலைபேசிகள், இவற்றுக்கு அனுப்பப்படும் விரசமான படங்கள். இதற்குள் மூழ்கி சமூக ஒழுங்கை இம்மியும் சிந்திக்காமல் குச்சொழுங்கைகளில் கூடி நின்று மற்றவர்களையும் பழுதாக்கும் இளவல்களின் நிட்டூரம்.

அப்பாடா! எப்படித்தான் இந்த நாசங்கள் அறுபடப் போகின்றது? இது பற்றிப் பலரும் சிந்திக்க வேண்டும். பெற்றோரின் பொறுப்பு என்பதில் ஆரம்பித்து இளைஞர்களுக்கான கல்வியறிவு, கணனி அறிவு, கருத்தரங்கு, காத்திர மான விழிப்புணர்வு, வேலை வாய்ப்பு, பயன் உள்ள பொழுதுபோக்கு, சமூகச் சீரழிவைத் தடுக்கும் இளைஞர் குழுக்கள் என்ற நீண்ட தொரு திட்டத்தை நிலைநிறுத்தினால், எங்கும் ஒழுங்கு, எதிலும் ஒழுங்கு என்று சங்கே முழங்கும்.

# நாட்டில் அமைதி நிலவுவதாகக் கூறுகின்ற அரசு அவசரகாலச் சட்டத்தை ஏன் நீக்கவில்லை

## கேள்வி எழுப்புகிறது கூட்டமைப்பு

நாட்டிலே பல தசாப்த காலமாக நிலவிவந்த யுத்தமானது தற்போது முடிபுக்கு வந்து அமைதி நிலை நிலவுவதாகக் கூறுகின்ற இலங்கை அரசானது அதற்காகவே கொண்டு வந்த அவசர கால சட்டத்தை மட்டும் ஏன் இன்னும் நீக்காமல் வைத்திருக்கிறது?

நாட்டிலே வடக்கு கிழக்கு பகுதிகளில் ஆட்கடத்தல், கொலை, காணாமல் போதல் சம்பவங்கள் இன்னுமே தொடர்ந்து நடைபெறுவதைக் காண்கின்றோம். இவற்றைச் செய்பவர்கள் யார்? அவசர காலச் சட்டத்தை இரத்துச் செய்யாமல் தொடர்ந்து அமுலில் வைத்திருப்பது இதற்காகவா? அப்படியானால் அரசாங்கம் தான் இதற்கான பின்னணியில் இருக்கிறது என்ற சந்தேகத்தை எமக்கு உருவாக்குகிறது என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் கூறினார்.

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி ராசமாணிக்கம் நினைவு மண்டபத்தில் இடம்பெற்ற ஒரு கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், நாட்டிலே இருக்கின்ற பல கட்சிகளைத் திட்டமிட்டு உடைத்து தன்னுடன் இணைத்த இந்த அரசாங்கமானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மாத்திரம் உடைக்க முடியாமல் போய்விட்டது. இதற்கு காரணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் எந்தச் சந்தர்ப்பத்திலுமே சோரம் போகாதவர்கள் எனத் தெரிவித்தார்.

இக் கூட்டமானது களுவாஞ்சிக்குடி பொதுமக்களால் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற பாராளுமன்ற உறுப்பினர்களை பாராட்டும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. இதில் பா.அரியநேத்திரனுடன் தெரிவான மற்ற உறுப்பினர்களான சீ.யோகேஸ்வரன், பொன் செல்வராசா ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் உரையாற்றும் போது, இனிவரும் காலங்களில் பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைபின் சார்பில் போட்டியிடுவதற்கான வேட்பாளர்களையும் அந்தந்தப்பகுதி மக்களே தெரிவு செய்யவேண்டும் எனவும் இதற்காக கிராமம், பிரதேசம், மாவட்டம் என குழுக்கள் அமைக்கப்பட்டு இதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இதனூடாக மக்களின் வாக்களிப்பு வீதத்தையும் அதிகரிக்கலாம் எனவும் கூறினார்.

பொன் .செல்வராசா உரையாற்றுகையில், மக்களின் தேவை அறிந்து அதற்கான திட்டங்களைத் தீட்டிச் செயற்படுவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் எனவும் முதலில் அகதி முகாம்களில் இருக்கின்ற எமது மக்கள் மீள குடியேற்றப்பட வேண்டும். இவர்களின் வாழ்வாதாரம் மீளமைக்கப்பட வேண்டும் எனக் கூறியதோடு எமது மக்கள் முகாம்களில் அல்லல்படும் போது எமக்கு எதற்காக பாராட்டு விழா கௌரவிப்புக்களெல்லாம் என மக்களைக் கேட்டுக் கொண்டார். பெருந்திரளான மக்கள் இதில் கலந்து கொண்டதோடு ஒருசிலர் தங்களது கருத்துக்களையும் முன்னிறுத்தி உரையாற்றினர். (ச-5)

# குற்றச் செயல்களைத் தடுத்து நிறுத்த உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்

## சரவணபவன் எம்.பி. கோரிக்கை

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பெருகிவரும் கடத்தல், கப்பம் கோரல், கொலை போன்ற கொடூரமான குற்றச் செயல்கள் மக்கள் மத்தில் பெரும் பீதியையும் அச்ச உணர்வையும் ஏற்படுத்தியுள்ளன. இந்தப் பய உணர்வால் குடாநாட்டு மக்களின் வழமையான வாழ்வும் அன்றாட நடவடிக்கைகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

பாடசாலைகளுக்குச் செல்லும் சிறார்கள் மிகுந்த பயத்துடன் உள்ளனர். பெண்கள், வயதானோர் வீடுகளில் தனித்திருக்க முடியாத நிலையில் அடக்குமுறை அச்சத்திற்கு உள்ளாகியிருக்கின்றனர். இந்தப் பீதி உணர்விலிருந்து மக்களை விடுவிக்க உறுதியான - காத்திரமான நடவடிக்கைகள் விரைந்து எடுக்கப்பட வேண்டும். இக் கொடூரங்களுக்கு காரணமான குற்றவாளிகள் தப்ப அனுமதிக்கப்படாமல் சட்டத்தின்முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள பீதி நிலைமை குறித்து தனது அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

இவற்றை மிக நிதானமாக கவனமாக கையாண்டு மக்களைப் பயத்திலிருந்து விடுவித்து அமைதியான வாழ்வைத் தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். குற்றவாளிகளையும் இக் குற்றத்துடன் தொடர்புடையவர்களையும் இனங்கண்டு சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்.சமூகச் சீரழிவுகளைத் தடுக்க வேண்டும்.

யுத்த காலத்தில் அச்சத்துடன் ஒடுங்கியபடி வாழ்ந்து பல இழப்புக்களுக்கு மக்கள் முகம் கொடுத்தமை போன்ற சூழல் மீண்டும் ஏற்பட்டுள்ளது. இவற்றை முறியடிக்கவும் மக்கள் விழிப்புணர்வுடன் நடந்து கொள்ளவும் வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ளார். (ந)

## யாழ் மாவட்டத்தில்

# கல்வி, மருத்துவம் மற்றும் நூலக மேம்பாட்டிற்கு சிங்கப்பூர் உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் கல்வி, மருத்துவம் மற்றும் நூலகங்களின் மேம்பாட்டிற்கு சிங்கப்பூர் உதவி வழங்க முன்வந்துள்ளது. இது தொடர்பில் ஆராய்வதற்கு சிங்கப்பூர் விசேட பிரதி நிதிகள் குழு யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ளனர். இக் குழுவில் வைத்தியர் ஆனந்தகுமார், நூலகர் மணியம் உள்ளிட்டோர் அடங்குவர். இக்குழு யாழ்மாவட்டத்தில் சுகாதார சேவைகள் மேம்படுத்தல் பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளில் தகவல் தொழில்நுட்பத்தை வளர்த்தெடுத்தல், நூலகங்களை விருத்திசெய்தல் போன்றவற்றிற்கு நிதியுதவி வழங்குவது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றனர்.

யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த இக்குழுவினர் நேற்று யாழ். அரச அதிபர் க.கணேஷைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். (ச-5)

# முதலில் உன்னைத் திருத்து! - பகவான் பாபா

❖ நீருக்கு மீன் அவசியமில்லை.ஆனால்,மீனுக்கு நீர் அவசியம்.அதுபோல குருவுக்கு சீடன் அவசியமில்லை. ஆனால், சீடனுக்கோ குரு மிகவும் முக்கியம்.குருவின் துணையில்லா விட்டால் சீடனால் எதுவும் செய்ய முடியாது.

❖ முதலில் நம்மை நாம் திருத்திக் கொள்ள வேண்டும்.அதன் பின் வீட்டைத் திருத்த வேண்டும்.அதன் பிறகே , நமது ஊரை திருத்த வேண்டும்.அடுத்து மாவட்டத்தையும் , பின்னர் மாநிலத்தையும் , அதற்கடுத்த படியாக நாட்டையும் திருத்த முயல வேண்டும்.இவ்வாறு படிப்படியாகத்தான் செயற்பட வேண்டும். அதை விட்டு விட்டு , எடுத்த எடுப்பிலேயே சமுதாயத்தையும் நாட்டையும் திருத்த முயல்வது அர்த்தமற்றது.

❖ நீரும் நீரும் எளிதில் ஒன்றாக கலந்து விடும்.ஆனால், நீரில் எண்ணெயை விட்டால் அது கலக்காமல் பிரிந்தே நிற்கும்.அதேபோல் நல்லவர்கள் நல்லவர்களுடன் எளிதில் சேர்ந்து விடுவார்கள்.ஆனால், கெட்டவர்கள் நல்லவர்கள் போல் நடித்து, அவர்களுடன் சேர முயற்சித்தாலும் அது முடியாமல் போய்விடும்.



❖ குளத்தில் நீர் இருந்தால் தவளைகள் அங்கே குவிந்திருக்கும்.நீர் வற்றி விட்டால் அங்கிருந்து வெளியேறி விடும். அதே போல ஒருவனிடம் பதவி , பணம் இருக்கும் போது மக்கள் அவனை சூழ்ந்து இருக்கின்றனர்.ஆனால், அவனுக்கு வறுமை ஏற்படும் போது உறவினர்களும் , உயிர் நண்பர்களும் விலகி விடுகின்றனர்.

❖ வளர்த்த பெற்றவர்களுக்கு நன்றி தெரிவிப்பது போல், படைத்த இறைவனுக்கும் தினமும் நன்றி தெரிவிக்க வேண்டும்.

**ஜெய்சாயிராம் யாதவன்**

# நடிகர் ஷாருக்கானின் வீட்டுக்கு முன் ஆர்ப்பாட்டம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் பிரபல ஹிந்தி நடிகர் ஷாருக்கானின் வீட்டுக்கு முன்னால் ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.


இலங்கையில் எதிர்வரும் ஜூலை மாதம் நடைபெறவுள்ள சர்வதேச இந்திய திரைப்பட விழாவில் கலந்துகொள்ளக்கூடாது என வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது.

இதில் 800 பேர் கலந்து கொண்டதாக சில ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்ட போதிலும், உண்மையில் 40 பேர் மட்டுமே ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டதாக திவயின சுட்டிக்காட்டியுள்ளது.

மும்பை பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்களை கலைத்துள்ளனர். இதேவேளை, இவ்வாறான அழுத்தங்களைக் கண்டு அஞ்ச வேண்டாம் எனவும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இந்திய மத்திய அரசாங்கம் தெரிவித்துள்ளது. (6)

# இலங்கை பயணம் குறித்து பரிசீலனை செய்யும் அமிதாப்புக்கு நன்றி- சீமான்

(சென்னை)



தமிழர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு கொழும்பு செல்வது பற்றி பரிசீலிக்கும் அமிதாப்பச்சனுக்கு நன்றி தெரிவித்துள்ளார் நாம் தமிழர் இயக்கத் தலைவரும், திரைப்பட இயக்குநருமான சீமான்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இந்திய அரசின் உதவியுடன் சர்வதேச திரைப்பட விருது வழங்கும் விழாவை எதிர் வரும் ஜூன் மாதம் 2 ஆம்திகதி முதல் 4 ஆம் திகதி வரை கொழும்பில் நடத்தத்திட்டமிடப்பட்டுள்ளது. இதில் இந்தி நடிகர் அமிதாப்பச்சன் முக்கிய பங்காற்றுவதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து இந்த விருது வழங்கும் நிகழ்ச்சியில் அமிதாப் கலந்து கொள்வதற்கு கண்டனம் தெரிவித்து அவரது வீட்டுக்கு முன்பு தமிழர் தொண்டர்கள் முற்றுகைப் போராட்டம் நடத்தினர்.

அத்துடன் அன்றைய தினமே அமிதாப் அவர்களைச் சந்தித்து 10 கோடித்தமிழர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு நிகழ்ச்சியில் கலந்து கொள்ளக்கூடாது என்ற கோரிக்கை மனுவையும் கையளித்தனர்.

இந்த நிலையில் போராடிய எமக்கு மாபெரும் வெற்றி கிடைத்துள்ளது.

இது குறித்து கருத்து தெரிவித்த அமிதாப், தமிழர்களின் உணர்வுகளைத் தான் புரிந்துள்ளதாகவும், அவர்களது உணர்வுக்கு மதிப் பளிப்பதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் விரைவில் இது குறித்து நிகழ்ச்சி நடத்தும் நிறுவனம் உட்பட அனைவரிடமும் பேசிஇணக்கமான நல்லமுடிவைத் தெரிவிப்பதாகவும் கூறியுள்ளார்.

எனவே கறுப்புக்கொடி ,ஆர்ப்பாட்டம் என்றாலே தமக்கு எதிரான ஒன்று என்று நினைக்கும் தலைவர் கள் மத்தியில், உலகெங்கும் வாழும் 10 கோடி தமிழர்களின் வேதனையான உணர்வுக ளைப் புரிந்து கொண்டு அதற்கு மதப்பளித்து தமிழர்களுக்கு சாதகமான முடிவை எடுப்பதாகத் தெரிவித்துள்ள அமிதாப்பிற்கு நாம் தமிழர் இயக்கம் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அத்துடன் அமிதாப் அவர்களைப் பின்பற்றி ஷாருக்கான், ஐஸ்வர்யாராய் உட்பட பிற நடிகர்களும் கலந்துகொள்ளக்கூடாது என்று கேட்டுக்கொள்கின்றேன். இந்த வெற்றி எமக்கு மட்டுமல்ல உலகெங்கும் வாழும் எம் தமிழ்ச் சொந்தங்களுக்கு கிடைத்த வெற்றியாகும் என்று அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

# தாய்லாந்து நாட்டில் ரயில் மறியல் போராட்டம்

(பாங்கொக்)

தாய்லாந்து நாட்டில் முன்னாள் பிரதமர் தக்ஷின் ஷினாவத்ராவின் ஆதரவாளர்கள் கடந்த 7 வாரங்களாக அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்தி வருகிறார்கள். இந்தப் போராட்டத்தில் 26 பேர் பலியானார்கள். போராட்டக்காரர்கள் செஞ்சட்டை அணிந்து போரா்ட்டத்தில் ஈடுபடுவதால் இந்தப் போராட்டம் செஞ்சட்டை போராட்டம் என்று வர்ணிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் பறக்கும் ரயில் நிலையங்களில் அவர்கள் மறியல் போராட்டம் நடத்தினார்கள். இதனால் ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இந்தப் போராட்டத்தை ஒடுக்க அரசாங்கம் கடும் நடவடிக்கை எடுக்கும் என்று ஆட்சியாளர்கள் அறிவித்துள்ளனர். (6)

# தமிழகத்தின் பெரும்பாலான இடங்களில் அனல் காற்றுடன் கூடிய வெயில்

## பொதுமக்கள் அவதி


(சென்னை)

தமிழகத்தின் பெரும்பாலான மாவட்டங்களில் அனல் காற்றுடன் வெயில் கொளுத்தியது. அனல் காற்றின் தாக்கம், இரவிலும் நீடித்ததால் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாயினர்.

கத்திரி வெயில் துவங்க, இன்னும் சில நாட்களே உள்ள நிலையில் தமிழகம் முழுவதும் வெயில் கொளுத்து கிறது. குறிப்பாக, உள்மாவட்டங்களில் வெயில் கடுமையாக உள்ளது. சென்னை மற்றும் கடலோர மாவட்டங்களில் கடல் காற்று வீசுவதால் வெயிலின் தாக்கம் சற்றுக் குறைந்து காணப்படுகிறது. தமிழகத்தின் பெரும்பாலான மாவட்டங்க ளில் கடந்த சில வாரங்களாக 100 டிகிரி பாரன்ஹீட்டிற்கும் அதிகமாக வெயில் பதிவா கியது. கடலோர மாவட்டங்களில் 96 டிகிரி பாரன்ஹீட்டிற்கு மிகாமல் உள்ளது. சென்னை மற்றும் புறநகர்ப் பகுதியில் சில நாட் களாக அனல் காற்றுடன் வெயில் கொளுத்தியதால், பகலில் பொதுமக்கள் வெளியே தலைகாட்ட அச்சப்பட்டனர். பகலில் வீசிய அனல் காற்று இரவிலும் நீடித்ததால், குழந்தைகள், முதியவர்கள் தூக்கமின்றி அவதிப்பட்டனர்.

இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரி ஒருவர் கூறும்போது, கடலிலிருந்து வீசும் குளிர்ந்த காற்று 10 கி.மீ., தூரம் மட்டுமே செல்லக்கூடியது. ஆகவே, சென்னை மட்டுமன்றி கடலோர மாவட்டங்களில் வெயிலின் அளவும் குறைந்து காணப்படுகிறது. புறநகர்ப் பகுதி 10 கி.மீ.க்கும் அதிக தூரம் என்பதால் சென்னையை விடக்கூடுதலாக 3 டிகிரி பதிவாகியது. எனவே, கடல் காற்று வீசும் பகுதிகளில் வெப்பத்தின் தாக்கம் சற்றுக் குறைவு. ஆனால், உள் மாவட்டங்களில் வெயில் கடுமையாக இருக்கிறது என்றார். (6)

# தமிழர் அமைப்புக்களின் ஆர்ப்பாட்டத்தை அடுத்து நடிகர் அமிதாபச்சன் பரிசீலனை



சர்வதேச இந்தியத் திரைப்பட அக்கடமியின் விருது வழங்கும் விழா இலங்கையில் நடத்தப்படவுள்ளமைகுறித்து தமிழர் அமைப்புக்களால் நடத்தப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை அடுத்து அதன் ஏற்பாட்டுக்குழு உடனடியாகக் கூடி விவாதிக் கவுள்ளதாக அந்தக் குழுவின் விளம்பரத் தூதுவரான நடிகர் அமிதாப்பச்சன் தெரிவித்துள்ளார்.

இந்திய சர்வதேச திரைப்பட விருது வழங்கும் விழா ஜூலையில் இலங்கையில் நடக்கத் திட்டமிடப்பட் டுள்ளது.

இலங்கையில் தமிழர்கள் அரசாங்கப் படைகளால் அநியா யமாகக் கொல்லப்பட்டதாக குற்றஞ் சாட்டுகின்ற இந்தியத் தமிழர் அமைப்புக்கள் இந்த விழாவை இந்தியத் திரைப்படத்துறையைச் சேர்ந்தவர்கள் புறக்கணிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார்கள்.

அத்துடன் இந்த விழாவின் ஏற் பாட்டில் முக்கியஸ்தராக திகழுகின்ற சர்வதேச இந்தியத் திரைப்பட அமைப்பின் விளம்பர தூதுவரான நடிகர் அமிதாப்பச்சனும் இந்த விழாவைப் புறக்கணிக்க வேண்டும் என்றும் அவர்கள் கூறிவருகிறார் கள்.

அதன்படி நாம் "தமிழர் இயக் கத்தினர்" அவரது வீட்டை முற்று கையிடும் போராட்டம் ஒன்றையும் மும்பையில் ஞாயிறன்று நடத்தினார்கள். அதனையடுத்து கருத்து வெளியிட்டிருக்கின்ற நடிகர் அமிதாப்பச்சன், அனைவரின் உணர்வு களும் மதிக்கப்பட வேண்டும் என்று கூறியுள்ளார்.

இது தொடர்பாக இணையத் தில் அவர் தெரிவிக்கையில், அந்த ஏற்பாட்டுக் குழுவினர் போராட்டம் நடத்தியவர்களை சந்தித்துப் பேசிய தாவும், ஆர்ப்பாட்டக்கார்களால் சமர்ப்பிக்கப்பட்ட மகஜர் ஒன்றையும் அவர் கள் பெற்றுக் கொண்ட தாகவும் கூறினார்.

அத்துடன் இந்த விடயம் குறித்து ஆராய்வதற்காக அந்தக் குழுவினர் உடன டியாக கூடவுள்ள தாகவும் இதுகுறித்து ஒரு இறுதி வழியையும், தீர்வையும் காண அவர்கள் முயற்சிப்பார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (6)

# மலேசியாவில் கைது செய்யப்பட்டிருக்கும் எம் உறவுகளை காப்பாற்றுங்கள்

## பா.ம.க.மாநில அமைப்பு செயலாளர்

இலங்கையில் இருந்து ஏதிலிகளாக சென்ற 75குடும்பங்களும் அதில் 15 பச்சிளம் குழந்தைகளும் மலேசியா அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டு அவர்களை அந்த நாட்டிற் குள்ளும் விடாமல் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்திடமும் ஒப்படைக்காமல் கடந்த மூன்று நாட்களாக பசியும் பட்டினியுமாக வாடி கொண்டு இருக்கின்றார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டு மத்திய அரசின் மூலமாக அவர்களின் உயிர்களைக் காப்பற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன் என்று கட்சியின் மாநில அமைப்பு செயலாளர் தி.வேல்முருகன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கையில் இருந்து புலம்பெயரும் அகதிகள் குறித்துசர்வதேச சமூகம் உரிய அக்கறை செலுத்தவில்லை என ஏற்கனவே சர்வதேச மன்னிப்புச்சபை குற்றம் சுமத்தியுள்ளது. சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் ஜரிக்கன், இலங்கை தமிழ் மக்கள் வாழ்வதற்குப் பாதுகாப்பான சூழல் ஒன்றைத்தேடி அந்த நாட்டில் இருந்து தொடர்ந்து வெளியேறி வருவதாகவும், அவர்களின் பாதுகாப்பான இடம்பெயர் விற்கும், புகலிட கோரிக்கைக்கும் சர்வதேச சமூகம் ஒத்துழைப்புக்களை வழங்குவதில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச சமூகத் தின் இந்த நடவடிக்கை காரணமாகத் தான் அப்பாவி தமிழ் மக்கள் பல்வேறு நெருக்கடிகளை சந்திக்க நேர்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

இவ்வாறு தொடர் ந்து இன்னல்களைச் சந்திக்கும் எம்மக்கள் தங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள அங்கி ருந்து அகதிகளாக வெளியேறுகிறார்கள்.

எனவே கைது செய்யப்பட்டிருக்கும் எம் தமிழ் உறவுகளை மலேசிய அரசாங்கம் அவர்களது உயிரைக் காப்பாற்றி மனிதாபிமானத்தோடு அவர்களை ஏற்றுக்கொண்டு அந்த பச்சிளம்குழந்தைகளையும் காப்பாற்றுமாறு கேட்டுக்கொள்கின்றேன். மலேசியா வாழ் எம் தமிழ் உறவுகளும் அவர்களுக்கு ஆதரவளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன் என்றுள்ளது. (6)

# மருத்துவ விசா தொடர்பில் ஜப்பான் புதிய நடைமுறை

ஜப்பானில் மருத்துவ சிகிச்சை மேற்கொள்ள விரும்பும் வெளிநாட்டவருக்கு நீண்ட நாள் விசா நடைமுறையை அறிமுகப்படுத்த அந்நாட்டு அரசு ஆலோசித்து வருகிறது.

தற்போதுள்ள விசா நடைமுறை களின் படி ஜப்பானில் மருத்துவ சிகிச்சை மேற்கொள்ள விரும்புவோர் குறுகிய கால சுற்றுலா விசா மூலம் சென்று சிகிச்சை பெறுகின்றனர். இத்தகைய விசாவுக்கான கால வரம்பு 90 நாட்கள் மட்டுமே. இதற்கு மேல் தங்கி சிகிச்சை பெற வேண்டுமானால் அவர்கள் விசா நீடிப்புக்காக விண்ணப்பிக்க வேண்டும். இது பெரும்சிரமத்தை ஏற்படுத்துவதாக உள்ளது. இதைக் கருத்தில் கொண்டு மருத்துவ சிகிச்சை பெறுபவர் களுக்கான நீண்ட நாள் விசா நடை முறையை அறிமுகப்படுத்த ஜப்பான் தீவிரமாக ஆலோசித்து வருகிறது.

இப் புதிய விசா நடை முறையின் மூலம் விசா நீடிப்புக்கு அவர்கள் விண்ணப்பிக்க தேவையிருக்காது. சீனா உள்ளிட்ட ஆசிய நாடுகளிலிருந்து தரமான சிகிச்சை பெற விரும்பி வருபவர்களை அதிக அள வில் ஈர்க்கவும் ஜப்பானின் பொரு ளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கிலும் இத்தகைய விசா நடைமுறை கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜூன்மாத இறுதி யில் ஜப்பானில் அறிவிக்கப்படவுள்ள பொரு ளாதார வளர்ச்சித் திட்டங்களில் இந்த நீண்ட நாள் மருத்துவ விசா நடைமுறையும் அறிமுகப்படுத்த அந் நாட்டு அரசு திட்டமிட்டுள்ளது. (6-4)




தென்கொரியாவில் வசிக்கும் மியான்மர் மக்கள் ஆங்சாங்சூகியை விடுதலை செய்ய வலியுறுத்தி தலைநகர் சியோலில் உள்ள மியான்மர் தூதரகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

# இருபது-20 உலகக் கிண்ணத்தை இந்திய அணி கைப்பற்றும்-தோனி



(மும்பை)

மேற்கிந்தியத்தீவுகளில் நடக்கவுள்ள மூன்றாவது இருபது-20 உலகக்கோப்பை தொடரில் சிறப்பாக செயல்பட்டு கோப்பையை வெல்வோம் என இந்திய அணித்தலைவர் தோனி தெரிவித்துள்ளார்.

மூன்றாவது இருபது-20 உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர் எதிர்வரும் 30ஆம் திகதி மேற்கிந்தியத்தீவில் ஆரம்பமாகிறது. 12 அணிகள் பங்கேற்கும் இத் தொடரில் இந்திய அணி சி பிரிவில், தென்னாபிரிக்கா மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகளுடன் இடம் பெற்றுள்ளது.

இத் தொடரில் இந்திய அணியின் வெற்றி வாய்ப்பு குறித்து தோனி தெரிவித்ததாவது,

கடந்த 45 நாட்களாக ஐ.பி.எல். தொடரில் விளையாடியது உலகக்கோப்பைக்கு நல்ல அனுபமாக அமைந்துள்ளது. ஓய்வின்றி விளையாடிவருவது இந்திய அணியின் செயற்பாடுகளுக்கு பாதகமாக அமையும் என்ற கருத்து ஏற்புடையதல்ல.

ஒவ்வொரு ஆண்டும் 250 முதல் 300 நாட்கள் வரை கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி வருகின்றோம்.

**பலமான அணி**

உலகக்கோப்பைக்கு பலமான அணி தேர்வு செய்யப்பட்டுள்ளது. காயம் காரண மாக சேவாக் இடம் பெறாதது ஏமாற்றம் தான் இருப்பினும் அணியில் இடம் பெற்றுள்ள மற்ற வீரர்கள் பொறுப்பை ஏற்றுக்கொண்டு சாதிப்பார்கள் என எதிர்பார்க்கிறேன்.

போர்ம் இன்றி தவித்துவரும் யுவராஜ் குறித்து கவலைப்படவேண்டிய அவசியம் இல்லை அவர் உலகக்கோப்பையில் நம்பிக்கையளிப்பார்.

**பிரச்சினையில்லை**

பந்துவீச்சைப் பொறுத்தவரை எந்தப் பிரச்சினையும் இல்லை. மேற்கிந்தியத்தீவுகள் ஆடுகளங்கள் சுழலுக்கு ஒத்துழைக்கும். ஹர்பஜன், யூசுப்பதான், ரவீந்திர ஜடேஜா ஆகியோர் சுழலில் அசத்தவுள்ளனர்.

இருபது-20 போட்டிகளில் எந்த அணி வெற்றிபெறும் என்பதை முன் கூட்டியே தீர்மானிப்பது கடினம். போட்டியின் கடைசிவரை 100 சதவீத ஆட்டத்தை வெளிப்படுத்தவேண்டியது அவசியம். இதனால் இந்திய அணியின் ஒவ்வொரு வீரர்களும் சிறப்பாக செயல்பட வேண்டும். இவ்வாறு தோனி தெரிவித்தார்.

## உலகக்கிண்ண உதைபந்தாட்டம் ஜீன் 11இல் ஆரம்பம்

உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் ஆரம்பமாக இன்னமும் இரண்டு மாதங்களுக்கும் குறைவான நாட்களே உள்ள நிலையில் தென்னாபிரிக்காவில் கோலாகலங்கள் இப்போதிருந்தே ஆரம்பமாகத் தொடங்கி விட்டன.

ஜீன் மாதம் 11ஆம் திகதி தொடங்கி ஜீலை மாதம் 11ஆம் திகதி வரை 2010 உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் இடம் பெறவுள்ளன.

32 நாடுகள், 9 நகரங்களிலுள்ள 10 விளையாட்டு அரங்கங்களில் இடம்பெறவுள்ள இந்தப் போட்டிகளில் கலந்து கொள்கின்றன.

உலகெங்கும் 100 கோடிக்கும் அதிகமான மக்கள் நேரிலும் தொலைக்காட்சிகளிலும் இந்தப் போட்டிகளைக் கண்டு ரசிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உலகின் மிகப் பெரிய விளையாட்டுத்திருவிழா என்று வர்ணிக்கப்படும் உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் ஒரு ஆபிரிக்க நாட்டில் முதல் முறையாக நடைபெறவுள்ளன.

# ஐ.பி.எல். போன்ற அமைப்பை லலித் மோடி ஆரம்பிப்பாரா?

கே.கே.மோடியின் நிறுவனத்தின் தலைமை பொறுப்பை லலித் மோடி விரைவில் ஏற்கவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. அத்துடன் லலித் மோடி விரும்பினால் ஐ.பி.எல்லை போன்ற புதிய அமைப்பை தொடங்க அவருக்கு ரூபாய் 400 கோடி பணம் தரத் தயார் என்று லலித் மோடியின் தந்தை கே.கே.மோடி கூறியுள்ளார்.

மால்பரோ, போர்ஸ்கொயர், ரெட்அன்ட்வையிட் போன்ற சிகரெட் வகைகளை தயாரித்து விற்கும் கேட்பிரே பிலிப்ஸ் இந்தியா நிறுவனத்தின் உரிமையாளராக இருக்கிறார் கே.கே.மோடி இந்த நிறுவனத்தின் சொத்து மதிப்பு 3 ஆயிரத்து 500 கோடி ரூபாய் ஆகும்.

மிகவும் ஆடம்பரமான வாழ்க்கை முறையை கொண்டவர் லலித் மோடி. இதனாலேயே மோடி நீக்கப்பட்டிருக்கலாம். ஆனால் லலித் மோடி மனம் தளரக் கூடாது. எதிர்த்துப் போராட வேண்டும். வெற்றிபெறவேண்டும் எனவும் கே.கே.மோடி தெரிவித்துள்ளார்.



மோடியை நம்பித்தான் அணி உரிமையாளர்கள் பணத்தை முதலீடு செய்துள்ளனர். மோடி மீதான நம்பிக்கை தான் ஐ.பி.எல். அமைப்பு இவ்வளவு தூரம் வளரக் காரணம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# முகமெட் அலியை விடவும் நான் திறமை வாய்ந்தவன்


## மேய்வோட்டர் பெருமிதம்

குத்துச் சண்டை உலகின் ஈடு இணையற்ற வீரராகப் போற்றப்படும் முன்னாள் குத்துச் சண்டை உலக சம்பியன் முஹமட் அலியை விடவும் தாம் திறமையானவர் என குத்துச்சண்டை வீரர் பொலைட் மேய்வோட்டர் தெரிவித்துள்ளார்.

33 வயதான மேய்வோட்டர் பங்குபற்றிய 40 போட்டிகளில் வெற்றியீட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நாளைமறுதினம் லாஸ்வேகாஸில் ஷேன் மோஸ்லியுடன் நடைபெறவுள்ள குத்துச் சண்டை போட்டி தொடர்பில் கருத்து வெளியிட்ட போது இதனைத் தெரிவித்துள்ளார்.

அதிபார குத்துச் சண்டை உலகின் ஜாம்பவான்களாகப் போற்றப்படும் முஹமட் அலி மற்றும் றே ரொபின்சன் ஆகியோரை திறமையானவர்கள் என கருத முடியாதென மேய்




வோட்டர் குறிப்பிட்டுள்ளார்.

உலகில் தம்மை விடவும் திறமையானவர்கள் கிடையாது எனவும் இதனால் குத்துச் சண்டை பேரவையின் கால அட்டவணையின் படி போட்டியிட்டு தமது திறமையை நிரூபிக்க வேண்டிய அவசியம் கிடையாதெனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

## டென்னிஸ் வரலாற்றில் முதல் தங்கம் வென்ற ஆடவர்

கிராண்ட்ஸ்லாம் பட்டங்களுடன் ஒலிம்பிக் தங்கமும் வென்ற முதல் ஆடவர் ஆந்தரே பிரதேச அகஸ்ஸி. டென்னிஸில் அதிக வருவாய் ஈட்டியவர்கள் பட்டியலில் சாம்ப்ராஸ், பெடரருக்குப்பின் 3ஆவது இடத்தில் உள்ளார். மொத்தம் 100 வாரங்களுக்கு உலகத் தரவரிசையில் முதலிடம் வகித்தார்.

16 வயதிலேயே தொழில் முறை ஆட்டக்காரராக தன்னை அறிமுகப்படுத்திய அகஸ்ஸி (1987) தரவரிசையில் 25ஆவது இடத்துக்கும் 1988இல் 3ஆவது இடத்துக்கும் முன்னேறினார்.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் சிறப்பாக விளையாடினாலும் 1992இல் முதல் முறையாக விம்பிள்டன் போட்டியில் பட்டம் வென்றார். இறுதி ஆட்டத்துக்கு முன் முன்னாள் விம்பிள்டன் சம்பியன்கள் பொரிஸ் பக்கர், ஜோன் மெக்கன்ரோ ஆகியோரை வீழ்த்தி முத்திரை பதித்தார்.

# இருபது-20 கிரிக்கெட் பயிற்சி ஆட்டத்தில் அவுஸ். அணியை வீழ்த்தியது சிம்பாவே

(சென்லூசியா)

இருபது-20 உலகக் கிண்ண பயிற்சி ஆட்டத்தில் சிம்பவே அணியிடம் ஒரு ஓட்டத்தினால் அவுஸ்திரேலிய அணி தோல்வியடைந்தது.

இருபது-20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் மேற்கிந்தியத்தீவுகளில் நாளை ஆரம்பமாகிறது.

இந்நிலையில் பங்குபெறும் அணிகளுக்கிடையிலான பயிற்சி ஆட்டங்கள் நேற்று ஆரம்பமானது.

இதில் அவுஸ்திரேலியா-சிம்பாவே அணிகள் மோதிய பயிற்சி ஆட்டம் நேற்று சென்லூசியாவில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி சிக்கும்புராவின் அதிரடி



சிக்கும்புரா

யான ஆட்டத்தின் மூலம் 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களையிழந்து 173 ஓட்டங்களை எடுத்தது.

இதில் சிக்கும்புரா 35 பந்துகளில் (5 பவுண்டரிகள், 6 சிக்ஸர்கள் அடங்கலாக) 76 ஓட்டங்களையும் எர்வின் 30 பந்து களில் (3 பவுண்டரிகள் உட்பட) 39 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஜோன்ஸன் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 172 ஓட்டங்கள் மாத்திரமெடுத்து ஒரு ஓட்டம் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் டேவிட் வோர்னர் 49 பந்துகளில் (4 பவுண்டரிகள், 5 சிக்ஸர்கள் அடங்கலாக) 72 ஓட்டங்களையும் அணித்தலைவர் மைக்கெல் கிளார்க் 42 பந்துகளில் (3 பவுண்டரிகள் உட்பட) 49 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அணித்தலைவர் உற்சயா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.





யாழ். மாவட்டத்தின் கல்வி, மருத்துவம் மற்றும் நூலகங்களின் மேம் பாட்டுக்கு உதவி வழங்கும் நோக் கில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த சிங்கப்பூர் பிரதிநிதிகள் அரச அதி பருடன் ஆலோசனை நடத்து வதையும் அவர்கள் அரச அதிபருடன் நின்று புகைப் படம் எடுத்துக்கொள் வதையும் படங்களில் காணலாம்.

...நகர சபை, யாழ்ப்பாணம்



# மேற்குலக நாடுகளின் தீர்வுத் திட்டங்களை சார்க் நாடுகள் ஏற்றுக் கொள்ளக் கூடாது

## சார்க் மாநாட்டில் ஜனாதிபதி மகிந்த உரை

(கொழும்பு)

மேற்குலக நாடுகளின் தீர்வுத் திட்டங்களைப் பலவந்தமாகத் திணிக்கப்படுவதனை சார்க் நாடுகள் ஏற்றுக் கொள்ளக் கூடாது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பூட்டானின் தலைநகர் திம்புவில் நடைபெற்ற 16-வது சார்க் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போது ஜனாதிபதி இதனை வலியுறுத்தியுள்ளார். அவர் மேலும் கூறியதாவது,

தெற்காசிய வலய நாடுகள் வெளிச் சக்திகளின் அழுத்தங்களுக்கு அடிபணியாது ஸ்திரமான கொள்கைகளைப் பின்பற்ற வேண்டும். தெற்காசிய வலய நாடுகள் பல்வேறு சாதனைகளைப் புரிந்துள்ள போதிலும் சில வேளையில் பிராந்தியத்தின் பலம் குறைத்து மதிப்பீடு செய்யப்படுகின்றது.

பிராந்திய வலய நாடுகளுக்கிடையிலான கூட்டுறவு பல்வேறு வெற்றிகளுக்கு வழிகோலும். பிராந்தியத்திற்கு வெளியேயான சக்திகளுடன் உறவுகளைப் பேணுவதில் காட்டும் முனைப்புப் பிராந்திய நாடுகளுக்கிடையில் காட்டப்படுவதில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

தெற்காசிய வலய நாடுகளுக்கிடையிலான பிணைப்பை மேலும் வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தேவை ஏற்படின் தற்போதைய கட்டமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடத் தயங்கக் கூடாது.

உலக விவகாரங்களில் தெற்காசிய வலய நாடுகளின் கூட்டுறவு மிகவும் அவசியமானது.சர்வதேச அரங்குகளில் தெற்காசிய வலய நாடுகளின் குரல் ஒருமித்த தொனியில் ஒலிக்க வேண்டும் எனவும் அந்த இலக்கை நோக்கியே எமது நடவடிக்கைகள் நகர வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக ஐக்கிய நாடுகளின் விவகாரங்களில் பிராந்திய நாடுகளுக்கிடையில் பிணைப்பு அவசியம் என அவர் தெரிவித்துள்ளார். உலகின் ஏனைய வலய நாடுகளுக்கிடையில் காணப்படும் சில வலுவான அமைப்புகளை முன்மாதியாகக் கொண்டு நாமும் செயற்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-9)

## சிக்கினார் ரஞ்சிதா

(பெங்களூர்)

சாமியார் நித்தியானந்தா, கர்நாடகப் பொலிஸாரிடம் நடிகை ரஞ்சிதா இருக்கும் இடத்தைத் தெரிவித்துள்ளார்.

சாமியார் நித்தியானந்தா கொடுத்த கைத்தொலைபேசி இலக்கத்தின் மூலம் ரஞ்சிதாவுடன் தொடர்பு கொண்டு கர்நாடகப் பொலிஸார் பேசினர்.

இதில் ரஞ்சிதாவை விசாரணைக்கு பெங்களூர் வருமாறும் கர்நாடகப் பொலிஸ் உத்தரவிட்டுள்ளது. இன்னும் இரண்டொரு நாள்களின் நேரில் வந்து விளக்கம் தருவதாகக் கர்நாடக சி.ஐ.டி. பொலிஸாரிடம் நடிகை ரஞ்சிதா ஒப்புதல் தெரிவித்துள்ளார். (ச)

## பார்வதி அம்மாவை திருப்பிய...

பார்வதியம்மாளை குடியுரிமை அதிகாரிகள் திருப்பியனுப்பியுள்ளனர்.

விசா உள்ளிட்ட உரிய அனுமதியுடன் சென்ற பார்வதியம்மாளை இந்தியாவுக்குள் அனுமதிக்காதது சர்வதேச மனித உரிமை மீறல். இதனால் பார்வதியம்மாளைத் தனி விமானம் மூலம் மீண்டும் சென்னை அழைத்து வர இந்திய மத்திய அரசு உத்தரவிட வேண்டும் எனக் கருப்பன் தனது மனுவில் தெரிவித்திருந்தார்.

மேலும் மருத்துவச் செலவுகள் அனைத்தையும் இந்திய மத்திய அரசே ஏற்க வேண்டும் எனவும் கூறியிருந்தார். இந்த வழக்கு நேற்று நீதிபதிகள் தர்மராவ், கே.கே.சசிதரன் ஆகியோர் கொண்ட அமர்வு முன் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது தமிழக அரசாங்கத்தின் தரப்பில் ஆஜரான சட்டத்தரணி ஜெயசிங், இந்த வழக்கில் மத்திய அரசையும் மாநில அரசையும் பிரதிவாதிகளாகச் சேர்த்துள்ளார்கள்.

பார்வதியம்மாளைத் திருப்பியனுப்பியதில் மாநில அரசுக்கு எந்தப் பங்கும் கிடையாது. வெளிநாட்டவர்கள் வருகையும் அனுமதி வழங்குவதும் இந்திய மத்தியஅரசின் கட்டுப்பாட்டில் உள்ளாவதாகும்.

எனவே மாநில அரசை இந்த வழக்கில் சேர்க்கக் கூடாது எனக் கூறியுள்ளார். இதனை ஏற்றுக் கொண்ட நீதிபதிகள் வழக்கில் இருந்து தமிழக அரசை நீக்க உத்தரவிட்டனர். பின்னர் நடந்த வாதத்தில் இந்திய மத்திய அரசாங்கத்தின் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் எம்.ரவீந்திரன் ஆஜராகி இன்று பதிலளிப்பதாகத் தெரிவித்துள்ளார். இதனையடுத்து வழக்கு விசாரணை இன்று வரை ஒத்தி வைக்கப்பட்டது. (ச-5)

## உறவுகளை...

இணங்கியுள்ளது. அதேவேளை இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைப் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்யுமாறு கிலானி அழைப்பு விடுத்துள்ளார். உலக நாடுகள் தமது கிரிக்கெட் அணியைப் பாகிஸ்தானுக்கு அனுப்பத் தயங்கிய நிலையில் இலங்கை, அணியைப் பாகிஸ்தானுக்கு அனுப்பியமை தொடர்பில் கிலானி இலங்கை ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

அதேவேளை லாகூரில் இலங்கை கிரிக்கெட் அணி மீதான தாக்குதல் தொடர்பாக இரண்டு நாடுகளும் ஒத்துழைப்புடன் விசாரணைகளை நடத்த வேண்டும் எனவும் பாகிஸ்தான் பிரதமர் கேட்டுக் கொண்டுள்ளார்.(ச-5)

## பொதுமக்களுக்குச் சேவை...

முடிகின்றது.

இது தொடர்பில் தற்போது சில குழுக்கள் கைது செய்யப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் ஒரு ஆச்சரியம் என்னவென்றால் மேற்படி இனந்தெரியாத குழுக்கள் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் எனத் தம்மைத் தெரிவித்துப் பொது மக்களை மிரட்டுவதுதான்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் சிறுவர்களை ஏன் கடத்த வேண்டும். கப்பம் கோர வேண்டும். இதனைப் பொதுமக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

எனவே சட்டவிரோதமாகச் செயற்படுவோர் தொடர்பில் பொதுமக்கள் இராணுவத்தினருக்கு அறிவித்தால் உடனடியாக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். இராணுவத் தினராகிய நாம் யாழ்.குடாநாட்டு மக்களின் வசதி கருதி அனைத்து வீதிச் சோதனைச் சாவடிகளையும் நீக்கி உயர்பாதுகாப்பு வலயம் தவிர்ந்த ஏனைய சகல இடங்களுக்கும் சென்று வரக் கூடிய வசதியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம்.

இதில் தென்னிலங்கையிலிருந்து வரும் பொது மக்களுக்கு ஒரு நடைமுறை, யாழ். குடாநாட்டு மக்களுக்கு ஒரு நடைமுறை என இராணுவம் பின்பற்ற மாட்டாது. அவ்வாறானதொரு பாகுபாடான சந்தர்ப்பத்தை இராணுவம் எச்சந்தர்ப்பத்திலும் வழங்கமாட்டாது.

யாழ்.குடாநாட்டில் அண்மைக்காலமாக இடம்பெறும் சட்டவிரோதமான செயல்களினால் பொதுமக்களின் பாதுகாப்புக் கருதி திடீர் வீதிச் சோதனைகளை நடைமுறைப் படுத்த முடிபு செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக வான்கள், மோட்டார் சைக்கிளில் செல்லும் சந்தேகத்திற்குரியவர்களை அடையாளம் கண்டு பொலிஸார் ஊடாக நடவடிக்கை எடுப்போம்.

எனவே பொதுமக்கள் சட்டவிரோதமாகச் செயற்படுபவர்கள் குறித்து 021 222 3398, 021 222 2267 என்ற தொலைபேசி இலக்கத்துக்கோ அல்லது அருகில் உள்ள படை முகாமிலோ அறிவித்தால் இராணுவத்தினர் மேற்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்வர்.

அத்துடன் வீதிகளில், பொதுஇடங்களில் மதுபோதையில் பொதுமக்களுக்கு இடையூறு கொடுப்போர் தொடர்பிலும் பொலிஸாருடன் இணைந்து இராணுவம் நடவடிக்கை மேற்கொள்ளும் என 51-வது படையணித் தளபதி தெரிவித்தார்.

இதேவேளை யாழ்.நல்லூரில் அமைக்கப்பட்டிருந்த திலீபனின் நினைவுத் தூபியைப் படையினர் அழித்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றனவே. இது தொடர்பில் தங்கள் கருத்து என்னவென்று அவரிடம் கேட்ட போது,

நான் இச் செய்தியை முற்றாக மறுக்கின்றேன். யாழ்.குடாநாட்டில் கடமைபுரியும் இராணுவத்தினர் பொதுமக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகத் தற்போதும் ஆயுதங்களுடன் செயற்படுவோருக்கு எதிராகவே நடவடிக்கை எடுப்பர்.

ஆனால் விடுதலைப்புலிகளால் அமைக்கப்பட்ட நினைவிடங்களை அழிப்பதால் மக்களுக்குப் பாதுகாப்பு ஏற்படும் எனத் தெரிவித்துப் படையினர் ஒருபோதும் அவற்றை அழிக்க மாட்டார்கள் என 51-வது படையணித் தளபதி பிரிகேடியர் சரத் விஜயசிங்க தெரிவித்தார். (ச-5)

## இனப்பிரச்சினைக்கு அரசியல்...

சார்க் உச்சி மாநாட்டுக்குப் பூட்டான் சென்றுள்ள இலங்கை, இந்திய வெளிவிவகார அமைச்சர்கள் நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இச் சந்திப்பின் போது இலங்கையில் நீண்ட காலமாகப் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினை தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதன்போது இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வொன்று மிகவும் வேகமாகவும் விரைவாகவும் காணப்பட வேண்டும் என இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவினால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக இலங்கையில் இனப்பிரச்சினை காணப்படுகின்றது. இதன் விளைவாகப் போரினால் பல்லாயிரக் கணக்கான மனித உயிர்களும் சொத்துக்களும் அழிக்கப்பட்டன.

தற்போது போர் முடிபுற்றுள்ள நிலையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியம் தற்போது ஏற்பட்டுள்ளது என்றும் இதனை விரைவாக மேற்கொள்ளுமாறும் பீரிஸிடம் எஸ்.எம்.கிருஷ்ணாவினால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கையில் வாழும் மூவின மக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய, அனைவரும் சமனான பங்கு வகிக்கின்ற தீர்வு குறித்து எமது அரசாங்கம் கவனம் செலுத்துகின்றது.

நாம் உருவாக்கும் தீர்வு தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் பயன்பெறக் கூடியதாக நிச்சயமாக இருக்கும். இதனை விரைவாக முன்னெடுப்போம் என்று ஜி.எல்.பீரிஸினால் எஸ்.எம்.கிருஷ்ணாவுக்கு எடுத்துக் கூறப்பட்டதாக கூறப்படுகின்றது.

இதுதவிர நலன்புரிக் கிராமங்களில் வாழும் மக்களின் பிரச்சினைகள் மற்றும் அவர்களின் மீள்குடியேற்றம் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

முகாம் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டும் அடிப்படை வசதி வாய்ப்புகளை வழங்கி விரைவாக மீள்குடியேற்றம் செய்யப்பட வேண்டும் என்றும் கிருஷ்ணாவினால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இது குறித்தும் தாம் கூடிய கவனம் செலுத்துவதாகப் பீரிஸ் கூறியுள்ளார். (ச-9)


A/L 2012

புவியியல் மாணவர்களுக்கு

தேர்ச்சி இல 01 இல் இருந்து

ஆரம்பம் 01.05.2010
சனிக்கிழமை

புவியியல்

பொருளியற் கல்லூரி

P.S குமரன்

யாழ்ப்பாணம் :- பிரிவு I - 11.00 பிரிவு II - 12.00
இணுவில் :- 6.15 மு.ப

(சி-160)


## மரண அறிவித்தல்

### செல்லையா செகராசசேகரம்



செம்பியன்பற்றைப் பிறப்பிடமாகவும் அணிஞ்சிலடி, கரவெட்டியை வதிவிடமாகவும் கொண்ட புராண வித்தக மாமணி செல்லையா செகராசசேகரம் (ஆயுள்வேத சித்த வைத்தியரும், புன்னையடி வைரவர் கோவில் பூசகரும்) அவர்கள் 28.04.2010 புதன்கிழமை காலமாகியுள்ளார்.

அன்னார் சின்னம்மாவின் அன்புக் கணவரும், தெய்வானை, வேதநாயகி, செல்வகுலசிங்கம் (தம்பி), செந்தில்நாதன் (முகாமையாளர் ப.நோ.கூ.சங்கம்-மருதங்கேணி), மகேஸ்வரி, செல்வக்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29.04.2010) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் பி.ப.3 மணிக்குத் தகனக் கிரியைக்காக ஞானசாரியார் வீதி, வேரோண்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அணிஞ்சிலடி,
கரவெட்டி.

தகவல்;
குடும்பத்தினர்.

(C-166)


அன்பு வாசகர்களே!

மிக விரைவில் உங்கள் வலம்புரியில்

எனதருமை உறவுகளுக்கு

தொடர் கடிதம் வெளிவரும்.

வாசிக்கத் தவறாதீர்கள்.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.04.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.